www.padippakam.com


# சவுத் விஷன்

## நூல் விவரப் பட்டியல்

அவசியம்
வாசிக்க வேண்டிய
அற்புத நூல்கள்

மக்கள் பதிப்பு விலையில்

நூல் விவரப் பட்டியல்

சவுத் விஷன்

SOUTH VISION

படிப்பகம்

www.padippakam.com


## பதிப்புரை

Basic Research is what I am doing when
I don't know what I am doing
Werher Von Brawn

அடிப்படை ஆராய்ச்சி என்னவென்றால் நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பதைப் பற்றியது தான். ஏனெனில் நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன் என்பது பற்றி எனக்கே தெரியாது இருப்பதன் காரணத்தால். வெர்னர் வான் பிரான்

*புத்தகம் நமது உள்ளத்திற்கு புத்துணர்ச்சியை அளித்து ஆற்றலை மேம்படுத்துகிறது. அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறது. அந்த வகையில் தான் இந்தச் சிறிய அறிமுகக் கையேடும். இதில் காணும் பல நூல்கள் நீண்ட நாட்களாக ஏன் பல ஆண்டுகளாக அச்சில் இல்லாமல் இருக்கின்றன. என்னுடைய கருத்தில் இவை வாசிக்கக் கிடைக்க வேண்டிய அவசிய நூல்கள். அதனால் தான் இவற்றை மக்கள் பதிப்பாக விலை குறைவாக மீண்டும் பதிப்பிக்கிறேன். இவற்றை நமது 'ஊழியர்களிடம்' சென்று சேர்ப்பிக்க வேண்டியது நம் அனைவரின் கடமை. 'அவர்கள்' அதை மாணவர்கள், இளைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், நகர்ப்புற - கிராமப்புற ஏழை மக்களிடம் சென்று சேர்ப்பிக்க வேண்டிய கடமை*

படிப்பகம்

www.padippakam.com



உள்ளவர்கள். இந்தப் பணிகளை உங்களைத் தவிர வேறு யாரும் செய்யப்போவதில்லை. இது வரலாறு உங்கள் மீது சுமத்தியிருக்கும் அரசியல் - வரலாற்றுக் கடமை.

இந்நூல்கள் அனைத்தும் விதைகளைப் போன்றது. விதையுங்கள் பின் அறுவடைக்கு தயாராகுங்கள்.

## என்ன செய்ய வேண்டும்?

Man's capacity for justice makes democracy possible, but man's inclination to injustice makes democracy necessary

- Revinhold Niebuhr

நீதியின் மீதுள்ள மனிதனின் இயல்பினால் ஜனநாயகம் சாத்தியமாகிறது ஆனால் 'அநீதியின் மீதுள்ள மனிதனின் நாட்டத்தால் ஜனநாயகம் அவசியமாகிறது

- ரியன்ஹோல்டு நெய்பர்

ஜனநாயகம் என்பதற்கு மற்றுமொரு சொல் கருத்து. அது எழுத்தாக உருவெடுக்கும் பொழுதுதான் மக்களை சென்று அடைகிறது. மேலும் வரலாறு இன்றும் பெரும்பாலும் வாய்மொழி வரலாறாகவே இருக்கிறது / இருந்து வருகிறது.

இவை களையப்பட பலர் முயன்று வருகின்றனர். அதில் நாங்களும் ஒரு சிறு பங்களிப்பை செய்து வருகிறோம். ஆனால் காலம் செல்ல செல்ல முரண்பாடுகள் கூர்மை அடைந்து பணம் படைத்தவர்கள் மேலும் பணம் சேர்க்க முடிகிறது. உழைக்கும் மக்களின் வாழ்வோ தாழ்ந்தபடியே செல்கிறது. அவர்கள் தங்களின் அடிப்படை தேவைகளையே (உணவு, உடை இருப்பிடம்) பூர்த்தி செய்யவே இயலாதவர்களாக போராடிக் கொண்டு இருக்கிறார்கள். இந்நிலையை மாற்றிட வெகுமக்கள் அணிதிரள நூல்கள் ஒரு பெரும் பங்களிப்பை செய்து வருகிறது. ஆனால் நூல்கள் தயாரிப்பதற்கான உற்பத்தி செலவுகள் கூடிக்கொண்டே வருகின்றன. சாதாரண

படிப்பகம்

www.padippakam.com



வாசகனை நூல்களின் விலை மிரட்டுகின்றன. இதை ஓரளவுக்கு மட்டுப்படுத்த அல்லது சமாளிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்ததின் விளைவே 'மக்கள் பதிப்பு விலை'.

நூல்கள் மக்களை சென்றடைய 'மக்கள் பதிப்பு விலை'

தீண்டாமை ஒழிப்பு மாநாடு மதுரையில் 2004ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்போது அதற்குச் சில மாதங்களுக்கு முன்பு சவுத் விஷன் வெளியிட்டிருந்த "தீண்டாத வசந்தம்'' என்கிற நாவலை மீண்டும் அம்மாநாட்டின் பொழுது வெளியிட தீர்மானித்தோம். முதல் பதிப்பின் விலை ரூ. 120/- இந்த விலையில் வெளியிட்டால் வாசகனைச் சென்று அடையுமா? வாசகர்களை வாங்கிடத் தூண்டும் வகையில் விலையைக் குறைத்திட என்ன செய்யலாம் என்று யோசித்தோம். அப்பொழுது வந்த யோசனை தான் 'மக்கள் பதிப்பு விலை'. மலிவு பதிப்பு அல்ல. முதற் பதிப்பிற்காகத் தயாரித்திருந்த மொழியாக்கச் செலவுகள், தட்டச்சு, பிழைதிருத்தம், நெகடிவ், அட்டை வடிவமைப்பு ஆகியவற்றின் செலவைக் கணக்கில் கொள்ளாமல் பேப்பர், அச்சு, பைண்டிங் ஆகியவற்றின் செலவை மட்டும் கணக்கில் கொண்டு விலையைத் தீர்மானித்தோம். புதிய மக்கள் பதிப்பு விலை ரூ.50/- நான்காயிரம் பிரதிகள் அச்சாகின. விற்றும் தீர்ந்தன.

ஒரு நூலின் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்றால் அடக்க செலவுகள் ஒரு மடங்கு என்று கணக்கிட்டால் விலையை 3 மடங்காக நிர்ணயிப்பது எமது நிறுவனத்தின் வழக்கம். ஆனால் சிலர் 4, 5, 6, 10 மடங்காகவும் ஆங்கில பதிப்புகள் பல மடங்குகளாகவும் நிர்ணயிக்கிறார்கள். அது ஒவ்வொரு நிறுவனத்தின் தேவைக்கு ஏற்பவும் நூல் உருவாக்கத்தில் உள்ள நிலைமைகள் தன்மைகள் கொண்டுதான் அந்நூல்களின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. பிரதிகள் எண்ணிக்கையும் விலை நிர்ணயிப்பில் ஒரு முக்கியப் பங்காற்றுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



## அடக்க விலை செலவுகள்

மொழியாக்கம்
பிழைத்திருத்தம்
லேசர் அச்சு
நெகடிவ்
அட்டை வடிவமைப்பு
ஸ்கேன் பாசிடிவ்

+

பேப்பர்
அச்சு
பைண்டிங்
பிற செலவுகள்

**முதல் மடங்கு**

**இரண்டாவது மடங்கு**
↓
விற்பனையாளர் கழிவு

**மூன்றாவது மடங்கு**
↓
ராயல்டி
மூலதன வட்டி
அலுவலக வாடகை
ஊழியர் சம்பளம்
மின்கட்டணம்
ஸ்டேஷனரி
போக்குவரத்து
தொலைபேசி
லாரி கட்டணம்
பேக்கிங் செலவுகள்
உணவு, டீ, செலவுகள்
மற்றும் பிற செலவுகள்

இந்த பொருளியல் அட்டவணை பார்க்கும் பொழுதே உங்களுக்குப் புரியும் விலை நிர்ணயிப்பின் அம்சங்கள் மற்றும் வேறுபாடுகள். மக்கள் பதிப்பு விலை உருவாக்கத்தின் பொழுது எமது அனுபவம் என்னவென்றால் அடக்க செலவை நாங்கள் ஒரு மடங்காக கொண்டது வெறும் பேப்பர், அச்சு, பைண்டிங் மட்டுமே.

படிப்பகம்

www.padippakam.com



இரண்டாயிரம் பிரதிகளுக்கு முன்வெளியீட்டு பணத்தைப் பெறமுடிந்ததால் மொத்தமாக ஒரே நேரத்தில் 4000 பிரதிகளை அச்சடிக்க முடிந்ததால் அந்நூலின் விலையை ரூ.50/- வைக்க முடிந்தது. இதை ஏன் எல்லா பதிப்புகளுக்கும் செய்யக் கூடாது என்று யோசித்தோம். முதலில் கைவசம் உள்ள நூல்களின் விலையை மக்கள் பதிப்பு விலையாகக் குறைந்து முத்திரை குத்தினோம். அதற்குப்பின் வெளியிடப்படும் மறுபதிப்புகளுக்கு 'மக்கள் பதிப்பு விலை' நிர்ணயித்தோம். புதிய நூல் பதிப்புகளுக்கு அந்த நூல் உருவாக்க செலவுகள் என் பொறுப்பில் நான் ஏற்றுக் கொண்டு அச்செலவுகளைக் கணக்கில் கொள்ளாமல் விலையை நிர்ணயித்தேன். இதைத் தொடர்ந்து செய்வதானால் இதற்கு ஒரு நிரந்தர ஏற்பாடு தேவைப்படுகிறது. 'சமூக ஆய்வுக் கழகம்' "Society for Social Studies" என்கிற அறக்கட்டளையை ஏற்படுத்த இருக்கிறோம். அவ்வறக்கட்டளை இந்தத் தயாரிப்புச் செலவுகளை ஏற்றுக்கொண்டு பதிப்பகம், பேப்பர் அச்சு, பைண்டிங் செலவுகளை மட்டும் செய்து மக்கள் பதிப்பு விலையில் விற்பனை செய்திடும். இதன் மூலமே நூல்கள் மக்களைச் சென்றடையும் என்று உறுதியாக நம்புகிறோம்.

நூல்கள் சரக்குகள் அல்ல. அவை பண்பாட்டின் சின்னங்கள் கல்வி, மருத்துவம், கலை, இலக்கியம், இசை, நாடகம் இவற்றின் செலவுகள் உற்பத்தி செலவுகளாக கொள்ளக் கூடாது. இதை நான் விளக்க வேண்டியது இல்லை. இச்செயல்பாடுகளையெல்லாம் மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் 'மக்கள் பதிப்பு விலை'யும் ஒரு பங்காற்றும் என நம்புகிறோம்.

*1.01.2010* **எம். பாலாஜி.**

படிப்பகம்

www.padippakam.com


## வீட்டிற்கோர் புத்தகசாலை

### பேரறிஞர் அண்ணா

உலகிலே எங்கேனும் ஓரிடத்தில் ஏதோ ஓர் காரணத்தால் நேரிடும் ஏதோ ஓர் சம்பவம், உலகின் மற்ற பாகங்களைப் பாதிக்கும் நாட்களில் நாம் வாழ்கிறோம். பாலஸ்தீனத்தில், போர் அது பற்றிய வாதப் பிரதிவாதம் பாளையங்கோட்டையில், இத்தாலியில் எலக்ஷன் என்றால், இங்கு எந்தக் கட்சி அங்கு வெற்றி பெறவேண்டும் என்பதுபற்றி விவாதம். உலகத் தொடர்பு அதிகரித்துவிட்ட, வளர்ந்து கொண்டே போகும் நாட்களிலே நாம் வாழ்கிறோம். வாழ்கிறோம் என்றால், நமது வாழ்வையும் நாட்டின் வாழ்வையும் வளமாக்கும் பெரும் பொறுப்பை ஆயிரம் மைலுக்கப்பாலிருந்து வந்தவர்களிடம் ஒப்படைத்து விட்டல்ல. யார் சிரத்திலே மணிமுடி ஜொலிக்கிறது? எவர் கரத்திலே உடைவாள் மின்னுகிறது என்று பார்த்து, ஆட்சிப் பொறுப்பை அப்படிப் பட்டவர்களிடம் ஒப்படைத்து விட்டுமல்ல. ஆட்சிப் பொறுப்பை மக்கள் ஏற்றுக் கொண்டு நாட்டில் நாயகர் நாங்கள் என்று மார்தட்டிக் கூறிக்கொண்டுள்ள நிலை இருக்கிறது. உலகுக்கு இது நன்கு தெரியும். உலகின் கவனம் நமது நாட்டின் பக்கம் நன்றாகத் திரும்பும் படியான முறையிலும், அளவிலும் நாம் நமது நாட்டின் சிறப்புப் பற்றியும், நமது ஆற்றலைப் பற்றியும் பாட்டு மொழியிலே பேசிவிட்டோம். சற்று அதிகமாகவே கூட என் நாடு பொன்னாடு, ஏது இதற்கோர் ஈடு என்று திருப்புகழ் பாடினோம். இங்கு வானைமுட்டும் மலைகள், வற்றாத ஆறுகள், வளமான வயல்கள், கனி



படிப்பகம்

குலுங்கும் சோலைகள் ஏராளம், முத்து உண்டு எமது கடலில், தங்கம் உண்டு எமது பூமியில் என்று ஆனந்தக் களிப்புச் சிந்து பாடியிருக்கிறோம். எல்லாம் சரி உமது நாட்டுக் கல்வி நிலையைக் கூறு என்று கேட்டால், நாம் வெட்கித் தலைகுனியும் நிலையில் இருக்கிறது. வேத வேதாந்திகள், சித்தாந்திகள், சிரோமணிகள், திரு அருளைப் பெற்றவர்கள் எமது நாட்டிலே உண்டு என்று பேசலாம், பேசுகிறோம். இன்னும் சிலர் பேசிக்கொண்டே இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் கண்ணனுக்குக் கையெழுத்துப் போடத் தெரியுமா என்றால், தலையை ஆட்டுகிறான், முத்தனோ மறந்துவிட்டது என்று கூறுகிறான். முனியன் கையெழுத்திடுகிறான். ஆனால் முன்னெழுத்தும் கடையெழுத்தும் சரியாக இருக்கிறது. இடையிலே உள்ள எழுத்துக்களோ, சம்பந்த மற்றவையாக உள்ளன. இந் நிலை இருக்கிறது நாட்டு மக்களில் மிகப் பெரும்பாலானோர்களுக்கு கூரியவாள், பலமான கேடயம், அஞ்சா நெஞ்சு. ஆனால், அந்த வீரனின் விழி பழுது. இந்நிலை நாட்டுக்குச் சிறப்பும் அளிக்காது. நல்லாட்சிக்கு வழி கிடைக்காது. நாட்டு நிலை உலக நிலைக்கு ஏற்ப வளர்ந்தாகவேண்டும். இதற்கு வீட்டு நிலை மாறவேண்டும் வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியம், நாட்டுக்கோர் நல்ல நிலை ஏற்படச் செய்யவேண்டும் என்ற திட்டத்துக்கு அடிப்படை. மலைகண்டு, நதிகண்டு, மாநிதிகண்டு அல்ல, ஒரு நாட்டை உலகம் மதிப்பது அந்த நாட்டு மக்களின் மன வளத்தைக் கண்டே மாநிலம் மதிக்கும். மன வளம் வேண்டும் மிக மிக விரைவில் மிக மிக அதிகமாக எழுத்தறிவற்றவர் ஏராளம் இந்நாட்டில். இது பெருங்கேடு. கல்வி பெற்றவர்கள் அனைவருக்குமாவது மன வளம் இருக்கிறதா? அவர்களின் வீடுகளாவது, நாட்டுக்குச் சிறப்பளிக்கும் நற்பண்புகள் செழிக்கும் பண்ணைகளாக, நாட்டுக்கு வலிவும் வனப்பும் தேடித்தரும் கருத்துக்கள் மலரும் சோலையாக உள்ளனவா என்றால், இல்லை என்று பெருமூச்சுடன் கூறித்தான் ஆகவேண்டும். உள்ளதை மறைக்காதிருக்க வேண்டுமானால், நாட்டு நிலை கண்டு உலகம் மதிக்கவேண்டுமானால், இந்தச் சூழ்நிலை மாறியாகவேண்டும். வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியத்தை நடைமுறைத் திட்டமாக்கி, சற்றுச் சிரமப்பட்டால், நமது நாட்டிலே நிச்சயமாக மன வளத்தைப் பெறமுடியும். நமது முன் சந்ததியார்களுக்கு இருந்ததை விட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில், ஆற்றோரத்தில், பர்ண சாலைக்குப் பக்கத்தில், ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு, காலைக் கடன்களை

www.padippakam.com


முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம், ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம், இப்போதுள்ளது, உலகை நமது வீட்டுக்கு அழைத்துவந்து காட்டக்கூடிய காலம். பாமர மக்கள் பாராளும் காலம். மன வளத்தை அதிகப்படுத்த மார்க்கம் முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம். இதோ நான் பேசுகிறேன். நீங்கள் கேட்கிறீர்கள். இடையே பலப்பல மைல்கள் நானோ நீங்களோ, தவசிகளல்லர், அருளால் அல்ல இந்த ஒலி அங்கு கேட்பது அறிவின் துணைகொண்டு விஞ்ஞானி ஆக்கித் தந்த சாதனம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்விதச் சாதனங்கள் இல்லாதிருந்த நாட்கள், நமது முன்னோர்கள் காலம்.

இவ்வளவு வசதிகள் நமக்கிருந்தும், ஏன், மன வளம் இவ்வளவு குறைவாக இருக்கிறது? வீடுகளிலே, மன வளத்தை அதிகரிக்கவோ, பாதுகாக்கவோ, நாம் முயற்சி செய்வதில்லை வழி வகை தேடிக் கொள்வதில்லை.

பெரும்பாலான வீடுகளின் அமைப்பையே பாருங்கள். கூடம் இருக்கும் விசேஷ காரியங்களுக்கும் பயன்பட கூடத்து அறை இரண்டிருக்கும். அதிலொன்று பூட்டியே இருக்கும். சாவி வீட்டின் அதிபரிடமிருக்கும். மற்றோர் அறையிலே தொட்டிலோ, ஏணியோ இருக்கும். அங்கு தூங்கும் குழந்தையை வேறோர் தொல்லைப்படுத்தும். அதைவிடப் பெரிய குழந்தைகளை இதனைச் சமையலறையிலுள்ள தன் தாயிடம் சென்று கூறும். பூஜை அறையில் அப்பா இருப்பார் போய்ச் சொல் என்று தாய் கூறுவாள். அங்கு அவர் இருக்கமாட்டார். மாட்டுத் தொழுவத்துக்குப் பக்கத்திலுள்ள திண்ணையில் படுத்துக் கொண்டிருப்பார். நம் வீடு ஏறக்குறைய இது போலிருக்கும். கூடம், பாதுகாப்பான அறை, படுக்கை அறை, சமையலறை, பூஜை அறை, இவை எல்லாம் இருக்கும். புத்தகம் உள்ள இடம், படிப்பதற்கென்று ஒரு அறை, தேடிப்பாருங்கள் மிகமிகக் கஷ்டம். பல வீடுகளிலே, தூண்களின் மீது சாளரங்களின் இடுக்கில், பிள்ளையார் மாடத்தில் சில புத்தகங்கள் இருக்கும். ஆனால் புத்தகசாலை உண்டா? என்று கேளுங்கள் பதில் கூறமாட்டார்கள். ஒரு புன்னகை தோன்றும், பைத்தியக்காரா இது வீடு. நீ என்ன இங்கு வந்து, புத்தகச் சாலை கேட்கிறாயே, என்று பொருள் அந்தப் புன்னகைக்கு.

வீடுகளில் மேஜை, நாற்காலி, சோபாக்கள் இருக்கும், பீரோக்கள் இருக்கும். அவைகளில் வெள்ளித் தாம்பாளமும், விதவிதமான

படிப்பகம்

www.padippakam.com


வட்டில்களும், பன்னீர் செம்பும் இருக்கும். பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும். உடைகள் சிறு கடை அளவுக்கு இருக்கும். மருந்து வகைகள் சிறு வைத்தியசாலை அளவுக்கு இருக்கும். அப்படிப்பட்ட வசதியுள்ள வீடுகளிலேயுங்கூட புத்தகசாலை இராது. இருக்கவேண்டுமென்று எண்ணம் வருவதே இல்லை. அவசியமும் தோன்றுவதில்லை.

இந்தச் செப்புக் குடம் சீரங்கத்தில் வாங்கியது. தேவா கலியாணத் தின் போது திருப்பதியில் வாங்கினோம். இந்தத் தாம்பாளத்தைப் பெல்லாரிக்குச் சென்றோமே பெண் பார்க்க, அப்போது வாங்கினோம். இந்த இரத்தன ஜமக்காளத்தைக் கார்த்திகை தீபத்தின்போது திருவண்ணாமலையில் வாங்கினோம். சிதம்பரத்திலே ஆருத்திரா தரிசனத்தின்போது இதை வாங்கினோம் என்று நமது வீடுகளில் பல சாமான்களைக் காட்டுவர். சாமான் ஒவ்வொன்றுக்கும் ஒரு சரித்திரமே கூறுவார்கள். ஆனால் பத்து நல்ல புத்தகங்களைக் காட்டி இன்ன சந்தர்ப்பத்தில் இவைகளை வாங்கினோம் என்று கூறமாட்டார்கள்.

வீட்டிலே அலங்காரத்தையும், விசேஷகால உபயோகத்திற்கான சாதனங் களையும் கவனிப்பதுபோல, வீட்டிற்கோர் புத்தகசாலை, சிறிய அளவிலாவது அமைக்க நிச்சயமாகக் கவனம் செலுத்த வேண்டும். அக்கறை காட்டவேண்டும். அறிவு ஆயுதமாகி விட்ட நாட்களிலே வாழும் நாம், இனியும் இந்தக் காரியத்தைக் கவனியாதிருப்பது, நாட்டுக்கு மறைமுகமாகச் செய்யும் துரோகச் செயலாகும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை நிச்சயம் வேண்டும் வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம், அலங்காரப் பொருள்களுக்கும், போக போக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி, புத்தகசாலைக்கு அந்த இடம் தரப்பட வேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும், முதல் இடம், புத்தகசாலைக்குத் தரப்படவேண்டும்.

எவ்வளவு செலவு? ஏது அவ்வளவு பணம் என்று கேட்பர்? பலருக்குத் தேவையான அளவு புத்தகம் வாங்கத்தான் முடியாது அந்தக் குறையைப் போக்க, பொது புத்தகசாலைகளை நடத்தி, சர்க்கார், நகரசபைகள், பொதுநலக் கழகங்கள், பணிபுரிய வேண்டும். ஆனால் சில அடிப்படை அறிவுக்குத் தேவையான புத்தகங்களையாவது, வீடுகளில் சேகரித்துப் பயன்படுத்தும் முறை இருக்கவேண்டும்.

பல புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள மட்டுமல்ல, ஏற்கெனவே நமது மக்களுக்குத் தெரிந்திருக்கிற பல விஷயங்களை

படிப்பகம்

www.padippakam.com


மறந்துபோகச் செய்வதற்குப் பல புத்தகங்கள் தேவை நமது மக்களுக்குக் கைலாய காட்சிகள், வைகுந்த மகாத்மியம், வரலட்சுமி நோன்பின் மகிமை, நாரதரின் தம்புரு, நந்தியின் மிருதங்கம், சித்ராபுத்திரரின் குறிப்பேடு, நரகலோகம், அட்டைக்குழி அரணைக்குழிகள், மோட்சத்தின் மோகனம், இந்திர சபையின் அலங்காரம், அங்குப் பாடி ஆடும் மேனகையின் அழகு இவையெல்லாம் தெரியும். ஆறுமுகம் தெரியும். அவர் ஏறும் மயில் தெரியும். அம்மை வள்ளிக்கும், அழகி தெய்வயானைக்கும் ஏசல் நடந்தது தெரியும். இவையும், இவை போன்றவையும் ஏராளமாகத் தெரியும்.

நந்துதிர்க்கமலை எங்கே, தெரியாது என்பர். நிதி மந்திரியின் பெயர் என்ன? அறியோம் என்பார்கள். காவிரியின் பிறப்பிடம்? கவலை கொள்ளார். பாலாற்றில் நீர் ஏனில்லை? சொல்லத் தெரியாது. நூல் ஆலைகள் எவ்வளவு உள்ளன? கணக்கு அறியார். தாராபுரம் எந்தத் திசையிலே இருக்கிறது? தெரியாது. தாமிரபரணி எத்தனை மைல் நீளம் ஓடுகிறது? திகைப்பர் பதிலறியாமல். அவர்கள் வாழும் மாவட்டத்தின் அளவு என்ன? தெரியாது என்பர். மாநகரத்தின் வருமானம் என்ன? அறியார்கள் அறிந்து கொள்ளவும் முயலமாட்டார்கள். அனுமத் பரபாவம் தெரியும். அரச மரத்தைச் சுற்றினால் என்ன பயன் கிடைக்கும் என்பதைக் கூறத் தெரியும். பேய் பில்லி, சூனியம் பற்றிய கதைகளைக் கூறத் தெரியும். அவர்கள் ஏறிச்செல்லும் ரயிலைக் கண்டுபிடித்தவர் யார் என்பது தெரியாது. அதிலேறிச் செல்லும் இடத்திலே அவர்கள் தரிசிக்கப்போகும் கருணானந்த சுவாமிகளின் கால்பட்ட தண்ணீர் கர்ம நோய்களைப் போக்கும் என்ற கதை பேசத் தெரியும்.

இது நமது மக்களின் மன வளம். இவர்கள் பெரும்பாலோர். இவர்களைக் கொண்டுள்ள நம் நாடு, அழிவுச் சக்தியில் அணுகுண்டு உற்பத்தியும், ஆக்கவேலைச் சக்தியில் சந்திர மண்டலத்திற்குச் சென்றுவரும் ஆராய்ச்சியும், நடத்திக் கொண்டுவரும் உலகிலே ஓர் பகுதி. சரியா? நாட்டில் எதிர்காலத்தில் அக்கறைகொண்ட யாரும், இந்த நிலை சரி என்று கூறமாட்டார்கள். சரியல்லதான், ஆனால் என்ன செய்வது என்று கேட்பர்? வீட்டிற்கோர் புத்தகசாலை அமைக்க வேண்டும் மக்களின் மனதிலே உலக அறிவு புக வழி செய்யவேண்டும். அவர்கள் தங்கள் நாட்டை அறிய, உலகை அறிய, ஏடுகள் வேண்டும். நிபுணத்துவம் தரும் ஏடுகள் கூட அல்ல, அடிப்படை உண்மை களையாவது அறிவிக்கும் நூல்கள் சிலவாவது வேண்டும்.

வீடுகளிலே நடைபெறும் விசேஷங்களின் போது, வெளியூர்கள் சென்று திரும்பும்போது, பரிசளிப்புகள் நடத்தும்போது, புத்தகங்கள்

படிப்பகம்

வாங்குவது என்று ஒரு பழக்கத்தைக் கொஞ்சம் வசதியுள்ள வீட்டார் சில காலத்துக்காவது ஏற்படுத்திக் கொண்டால், சுலபத்தில் ஒரு சிறு புத்தகசாலையை அமைத்து விடலாம்.

புத்தகசாலை அமைக்கும்போது, ஏற்கெனவே நமது மக்களின் மனதிலே ஊறிப்போய் உள்ள, அர்த்தமற்ற, அவசியமற்ற கேடே கூடச் செய்யக்கூடிய எண்ணங்களை நிலை நிறுத்தக்கூடிய ஏடுகளைச் சேர்க்கக்கூடாது. சேர்த்தால் மன வளம் ஏற்படாது. மனம் சதுப்பு நிலமாகும். பழமைப் புழுக்கள் நெளியுமிடமாகும்.

புத்தகசாலை அமைப்பது என்று திட்டமிட்டுப் புது வருஷப் பஞ்சாங்கத்தில் ஒரு மூன்று தினுசும், பழைய பஞ்சாங்கக் கட்டு ஒன்றும், பவளக்கொடி மாலையும் பஞ்சாமிர்தச் சிந்தும், பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையும் பேய் பேசிய புராணமும், நல்லதங்காள் புலம்பலும், அரிச்சந்திரமயான காண்டமும் ஆகியவற்றை அடுக்கி வைத்தால் நாம் கோரும் மன வளம் ஏற்படாது. நமது நாட்டை வஞ்சகர் களுக்கு ஏற்ற வேட்டைக்காடு ஆக்கும். தீக்குச்சி சேர்ப்பது போலாகும்.

உலக அறிவை, உருப்படியான காரியத்துக்குப் பயன்படும் அறிவைத் தரக்கூடிய புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும். பழைய முறைகளையும் எண்ணங்களையும் மேலும் ஊட்டக்கூடிய ஏடுகளைச் சேகரித்து அதற்குப் புத்தகசாலையென்று பெயரிடுவது, குருடர்களைக் கூட்டிவைத்து, அவர்கள் உள்ள இடத்துக்கு, வழிகாட்டுவோர் வாழும் இடம் என்று பெயரிடுவது போன்ற கோமாளிக்கூத்தாக முடியும்.

ஒவ்வொர் வீட்டிலும், வசதி கிடைத்ததும், வசதி ஏற்படுத்திக் கொண்டதும், அமைக்கவேண்டிய புத்தகசாலையில், நாட்டு வரலாறு, உலக நாடுகளின் நிலையைக் குறிக்கும் நூல்கள், இவை முதலிடம் பெறவேண்டும். பொதுவாகவே, மக்களின் அறிவுக்குத் தெளிவும், ஆண்மைக்கு உரமும், ஒழுக்கத்துக்கு வலிவும் தரத்தக்க நூல்கள் இருக்க வேண்டுமேயொழிய, வாழும் இடத்தை வகையற்றது என்று கூறி, வான வீதிக்கு வழிகாட்டும் நூல்களும், மாயாவாதத்தையும், மனமருட்சியையும் தரும் ஏடுகளும் தன்னம்பிக்கையைக் கெடுத்து, விதியை அதிகமாக வலியுறுத்திப் பெண்களை இழித்தும் பழித்தும் பேசிடும் நூல்களும் இருத்தலாகாது.

பஞ்சாங்கம் அல்ல, புத்தகசாலையில் இருக்கவேண்டியது அட்லஸ் உலகப்படம் இருக்கவேண்டும்.

இந்த அடிப்படை பிரச்சனையிலே நேர்மையான முறையையும், நெஞ்சு உரத்தையும் காட்டியாகவேண்டும் அப்போதுதான் வீட்டிற்கோர்

www.padippakam.com


புத்தகசாலை அமைப்பது என்பது அறிவுத் தெளிவுக்கு வழி செய்யும் மன வளத்தை உண்டாக்கும். நாட்டை வாழ வைக்கும், புலியை அழைத்துப் பூமாலை தொடுக்கச் சொல்ல முடியாது. சேற்றிலே சந்தன வாடை கிடைக்குமென்று எண்ணக்கூடாது.

நமது பூகோள அறிவு, பதினான்கு லோகத்தைக் காட்டிற்று. அந்த நாட்களில், நமது மார்க்க அறிவு நரபலியைக் கூடத் தேவை என்று கூறிற்று அந்த நாட்களில், நமது சரித்திர அறிவு, பதினாயிரம் ஆண்டு ஒரு மன்னன் ஆண்டதாகக் கூறி வைத்தது. நமது பெண் உரிமையைப் பற்றி அறிவு, காமக்கிழத்தி, வீட்டுக்கு நாயகனைக் கூடையில் வைத்துத் தூக்கிச்சென்ற பத்தினியைப் பற்றி அறிவித்தது. நமது விஞ்ஞான அறிவு, நெருப்பிலே ஆறும், அதன் மீது ரோமத்தால் பாலமும் இருப்பதாக அறிவித்தது.

அப்படிப்பட்ட எண்ணங்களுக்கு ஆதாரமாக இருந்த ஏடுகளை இந்த நாட் களிலே நாம், வீட்டில் புத்தக சாலையில் சேர்ப்பது, நாட்டு நலனுக்கு நிச்சயமாகக் கேடுச்செய்யும்.

பூகோள, சரித ஏடுகள் இருக்கவேண்டும் நமக்கு உண்மை உலகைக் காட்ட, நமக்கு ஒழுக்கத்தையும், வாழ்வுக்கான வழிகளையும் காட்ட, வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயமாக இருக்கவேண்டும்.

நமது தமிழகத்தின் தனிச்சிறப்பு என்று கூறத்தகும் சங்க இலக்கிய சாரத்தைச் சாமான்யரும் அறிந்து வாசிக்கக் கூடிய முறையில் தீட்டப்பட்ட ஏடுகள் இருக்கவேண்டும். குறைந்தபட்சம், மக்கள் முன்னேற்றத்துக்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைப் பற்றிய முக்கியமானத் தகவலைத் தெரிவிக்கும் நூல் இருக்கவேண்டும்.

நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மனமாசு துடைத்தவர்கள், தொலை தேசங்களைக் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் இருக்கவேண்டும்.

இந்த அடிப்படையில் வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக் கொண்டால், நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும். வீட்டிற்கோர் புத்தக சாலை தேவை - ஆனால் கேட்டினை நீக்கிடத் தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக இருக்கவேண்டும் வீட்டிலே அமைக்கும் புத்தகசாலை.

**பேரறிஞர் அண்ணா**

*(திருச்சி வானொலி நிலையச் சொற்பொழிவு, முதல் பதிப்பு அக்டோபர் 1949, வெளியீடு: முத்தமிழ் நிலையம், சென்னை)*

படிப்பகம்

# கம்யூனிசக் கொடியின் கீழ்...

## ஜூலியஸ் பூசிக்

*கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் தனி வார்ப்புகள். தனிதாதுக்களால் ஆக்கப்பட்டவர்கள்; உலகப் பாட்டாளி வர்க்கப் படையின் நேர் நிகரற்ற போர்த் தந்திரியான தோழர் லெனின் அணியின் அங்கத்தினர்கள். இந்த அணியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதைவிட சிறந்த பெருமை எங்களுக்கு வேறெதுவும் இல்லை. தோழர் லெனினால் அமைக்கப்பெற்று, அவரது தலைமையில் இயங்கிய கட்சியில், இயக்கிய கட்சியில் உறுப்பினர் என்பதைவிட சிறந்தப் பெருமை வேறொன்றும் இல்லை. இப்படித் தொடங்குகிறது. லெனின் மறைந்த காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் பெயரால் தோழர் ஸ்டாலின் எடுத்துக்கொண்ட சபதம். ஆம்! நாங்கள் தனி வார்ப்புகள்தான், ஏனென்றால் நாங்கள் மக்கள்.*

*கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் வாழ்க்கையை நேசிக்கிறோம். எனவேதான் மகிழ்ச்சியும் நிறைவும் சுதந்திரமும் கூடிய இலட்சிய வாழ்வுக்கான பாதையை அமைக்கும் பொழுது குறுக்கிடும் தடைகளைத் தகர்த்தெறிவதில் எங்கள் உயிரையும் தியாகம் செய்ய எந்நேரத்திலும் நாங்கள் தயங்குவதில்லை. அடிமைத்தனம், சுரண்டல் என்னும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு முழந்தாளிட்டு வாழ்தல், வாழ்க்கையே அல்ல. அது மனிதன் என்ற பெயருக்கே அவமானம் தருவதாகும். இந்த அவல வாழ்வில் ஒரு கம்யூனிஸ்டு, ஒரு உண்மையான மனிதன் என்ற வகையில் திருப்தியடைய ஒன்றும் இல்லை. ஒருபோதும் இல்லை. எனவேதான், கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் உண்மையான வாழ்வுக்காக நடைபெறும் போராட்டத்தில் எத்தகைய தியாகத்தையும் செய்யப் பின்வாங்குவதில்லை.*

*கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் மனிதனை நேசிக்கிறோம். மனிதத் தன்மையுள்ள எதுவும் எங்களுக்குப் புறம்பானதல்ல. மிகச் சாதாரண*

மனித இன்பங்களின் மதிப்பை நாங்கள் அறிவோம். அவற்றிலும் நாங்கள் மகிழ்ச்சி காண முடியும். எனவேதான் மனிதன் உழைப்பை மனிதன் பறிக்கும் அராஜக அமைப்பின் கொடுமையிலிருந்து - அதாவது பயங்கரப் போரின் துன்பத் துயரங்கள் வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய கொடுமையிலிருந்து - விடுவிக்கப்பட்டு மகிழ்ச்சியும் நிறைவும் ஆரோக்கியமும், சுதந்திரமும் உள்ள மனிதனுக்கு இந்தப் பரந்த உலகில் ஒரு இடம் அளிப்பதற்காக எங்கள் சுக போகங்களைத் தியாகம் செய்ய நாங்கள் ஒருபோதும் தயங்குவதில்லை.

இலாபம், அதிக இலாபம் மீண்டும் இன்னும் அதிக இலாபம். இதையே குறிக்கோளாகக் கொண்ட ஓர் அமைப்பு மக்களுக்கிடையே நேச உறவு நிலவுவதற்குப் பதிலாக, பண உறவையே அடிப்படையாகக் கொண்ட ஒரு அமைப்பை நிலைநிறுத்தப் பார்க்கிறது அது. மனிதனைக் காட்டிலும் பணத்திற்கே அதிக மதிப்பைத் தருகிற மனிதத் தன்மையற்ற அமைப்பாகும். மனிதனை நேசிக்கிற ஒரு மனிதனுக்கு, ஒரு கம்யூனிஸ்டுக்கு மக்களின் மனிதத் தன்மை பறிக்கப்படுகின்ற பொழுது, சும்மா இருக்க முடியுமா? முடியாது. எனவேதான் நிறைவும் சுதந்திரமும் பண்பும் பொருந்திய மனிதனுக்காகப் போராடுவதில் தங்கள் முழு வலிமையைப் பயன்படுத்தவோ தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் பின்வாங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் சுதந்திரத்தை விரும்புகிறோம். எனவேதான் உண்மையான சுதந்திரத்தை விரிவான சுதந்திரத்தை சுதந்திரம் என்ற வார்த்தைக்கு உரிய இலட்சணத்தோடு கூடிய சுதந்திரத்தை மனிதகுலம் முழுமையும் பெறுவதற்காக எங்கள் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு தோழர் லெனின் படையின் கட்டுப்பாட்டுக்கு இஷ்ட பூர்வமாகப் பணிவதற்கு நாங்கள் ஒரு வினாடியும் தயங்குவதில்லை.

ஒரு சிலருக்கு மட்டுமே சுதந்திரம் - கொள்ளையடிக்க ஒரு தரப்பினருக்குச் சுதந்திரம். மற்றவர்களுக்குப் பட்டினியால் மடிய சுதந்திரம். இவை சுதந்திரம் அல்ல. அடிமைத்தனம். இந்த நிலைமைகளைக் கண்ட பிறகும் வாளா இருக்க ஒரு கம்யூனிஸ்டுக்கு முடியுமா? சில தனி நபர்களுக்கு இதய கீதமாக விளங்கும் அத்தகைய சுதந்திரத்தால் திருப்தி அடைய முடியுமா? முடியாது. ஒரு போதும் முடியாது. எனவே தான் உண்மையான சுதந்திரத்திற்காக, விரிவான சுதந்திரத்திற்காகப் போராடுவதில் தங்களுடைய முழு வலிமையைப் பயன்படுத்தவோ தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் ஆக்க வேலையை நேசிக்கிறோம். எனவேதான் மனிதனின் மகத்தான சிருஷ்டி சக்திகளுக்குக் குறுக்கே நிற்பவற்றைத் தகர்த்தெறிய ஒரு விநாடியும் தயங்குவதில்லை.

ஆயிரம், பல்லாயிரக்கணக்கான திறமையுடைய மனிதர்கள் மனித கலாச்சாரத்தைப் பல மடங்கு பெருக்கியிருக்க முடியும். மனித ஸ்தாபனத்தைச் சீர்திருத்தியிருக்க முடியும். மனிதனின் தொழில்நுட்ப சாதனங்களைக் கற்பனைக்கு எட்டாத அளவுக்கு உயர்த்தியிருக்க முடியும். அத்தகையத் திறமைகள் இன்று பாழ்பட்டுக் கிடக்கின்றன. மனித குலத்திற்குத் தேவையுள்ள அனைத்தையும் ஏராளமாக அளிக்கும் திறமையும் வலிமையும் படைத்த ஆயிரம் ஆயிரம் கரங்கள், இன்று வேலையின்றி, சோம்பிக் கிடக்கின்றன. அடிக்கடி நிகழ்கின்ற நெருக்கடியான காலங்களில், அத்தகைய கரங்கள் சோம்பிக் கிடக்கும்படி நிர்பந்திக்கப்படுகின்றன. இதனால் மனித சமுதாயத்திற்கு நேரிடுகின்ற நஷ்டத்தைத் தடுக்காமல் உட்கார்ந்திருக்க ஒரு கம்யூனிஸ்டுக்கு எப்படி முடியும்? முடியாது. எனவேதான் மனித குல சிருஷ்டி சக்திகள் அனைத்தையும் முழுமையையும் பயன்படுத்தி முழு வளர்ச்சி அடையும்படி செய்யும் ஒரு அமைப்பைப் பெறுவதற்கான போராட்டத்தில் தங்கள் முழு வலிமையைப் பயன்படுத்தவோ தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் சமாதானத்தை நேசிக்கிறோம். எனவேதான் நாங்கள் போராடுகிறோம். போர் மூளுவதற்கான சூழ்நிலைகள் அனைத்தையும் நாங்கள் எதிர்த்துப் போராடுகிறோம். சில தனி நபர்களின் சொந்த நலன்களுக்காக நடைபெறும் பயங்கரப் போரில் கோடிக்கணக்கான மக்கள் மாண்டு மடிவதற்கும் மனித வாழ்வுக்கு அவசியமான செல்வங்களை அழிப்பதற்கும் காரணமாகும். ஒரு குற்றவாளி கூட இல்லாத உலக அமைப்புக்காக நாங்கள் போராடுகிறோம். ஒரு வாய்ச் சோற்றுக்காக மனிதனை எதிர்த்து மனிதன் சண்டை போட வேண்டிய நிலைமை எங்கே இருக்கிறதோ அங்கே சமாதானமிருக்காது. இருக்கவும் முடியாது. எனவேதான் உண்மையான சமாதானத்திற்காக, இறுதி சமாதானத்திற்காக, மனித சமுதாயத்தின் புதிய ஸ்தாபனத்தால் உத்தரவாதம் செய்யப்படும் சமாதானத்திற்காகப் போராடுவதில் தங்கள் முழு உரிமையைப் பயன்படுத்தவோ தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.

www.padippakam.com


கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் எங்கள் நாட்டை நேசிக்கிறோம். ஏனென்றால், எந்தவொரு நாடு அடக்கி ஒடுக்கப்பட்டாலும் மனிதனின் ஆக்க சக்திகள் சுயேச்சையாக வளர்ச்சி அடைய முடியாது; இறுதியான சமாதானத்திற்கு உத்தரவாதம் இருக்காது. ஒரு நாடு மற்றொரு நாட்டை அடக்கி ஆண்டால் உண்மையான சுதந்திரம் இருக்க முடியாது. நமது மாபெரும் இலட்சியங்களை நாட்டின் ஜீவித அமைப்புக்குள்ளேயே அடைய விரும்புகிறோமே தவிர, அதற்கு அப்பாற்பட்டல்ல. இல்லாவிட்டால் அவை எதார்த்தமாக முடியாது.

உண்மையான புதல்வர்களின் நேசத்தோடு நாங்கள் தாய்நாட்டை நேசிக்கிறோம். எனவே தான் மனித குல மேன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் எங்கள் நாடு வழங்கிய, இன்னும் வழங்குகிற எல்லாக் காரியங்களுக்காகவும், அதன் மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் உதவியாக உள்ள அனைத்திற்காகவும், நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். எங்கள் நாட்டை இழிவுபடுத்துகிற, கொள்ளையிட விரும்புகிற, அதன் இரத்தத்தை உறிஞ்சுகிற, அதை பலவீனப்படுத்துகிற அனைத்தையும் நாங்கள் அழித்துவிட விரும்புகிறோம். எனவேதான், உலகில் சுதந்திரம் பெற்ற சமத்துவ நாடுகளின் மத்தியில் சம அந்தஸ்தோடு சுயேச்சையாக வாழும் பொருட்டு எங்கள் நாட்டின் பரிபூரண விடுதலைக்கானப் போராட்டத்தில் எங்கள் முழு வலிமையை ஈடுபடுத்தவோ சர்வ பரித்தியாகம் செய்யவோ நாங்கள் தயங்குவதில்லை.

நாங்கள் நிறைவேற்றவேண்டிய வேலைகள் மகத்தானவை.

மகிமை வாய்ந்த உலகப் பாட்டாளி வர்க்க போர்த் தந்திர நிபுணரின் பட்டாளத்தைச் சார்ந்த - தோழர் லெனினின் பட்டாளத்தைச் சார்ந்த - நாங்கள் இப்பொறுப்புக்களை நிறைவேற்ற கடமைப் பட்டிருக்கிறோம். ஆகவே, இந்தப் பட்டாளத்தின் ஒற்றுமையையும் தூய்மையையும் கம்யூனிஸ்டு கட்சியின் ஒற்றுமையையும் புனிதத் தன்மையையும் கண்ணின் கருமணி போன்று பாதுகாப்பது, மனித குலத்தில் சிறந்தவர்களையும் நாட்டின் சிறந்த சக்திகளையும் மேலும் மேலும் திரட்டுவது, எங்கள் கூட்டாளிகளின் எண்ணிக்கையை மேலும் மேலும் அதிகரிப்பது, வரலாற்றின் வளர்ச்சி எதை நோக்கிச் செல்கிறது. தங்களின் ஜீவாதார நலன்களுக்காக அது மக்களிடம் வேண்டி நிற்பது என்ன என்பவற்றை இடைவிடாது உணர்த்தி மக்களுடன் ஒன்று கலந்து சலிப்பின்றி பொறுமையோடு அவர்களுக்கு வழி காட்டுவது, உண்மையான உணர்வு, தைரியம், கருத்தில் உறுதி, தியாகம், சஞ்சலம்,

படிப்பகம்

இன்மை ஆகிய சிறந்த மனிதப் பண்புக்கு இருப்பிடமாக விளங்குவது போன்றவையே நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளாகும்.

கம்யூனிஸ்டு தோழர்களே! இது உங்களுக்கும் பொருந்தும்! ஏனென்றால், நீங்கள் லெனின் படையைச் சேர்ந்தவர்கள். நீங்கள் எந்தப் பகுதியில் வேலை செய்து கொண்டிருப்பினும் மனித குலத்தின் விடுதலைக்காகப் புரட்சியின் எந்த அரணில் நின்று போராடிக் கொண்டிருப்பினும் தன்னந்தனியாக கடமையைச் செய்து கொண்டிருப்பினும் கொடிய வர்க்கங்களால் இருண்ட சிறைகளில் பூட்டப்பட்டிருப்பினும் ஒவ்வொரு நாளும் உங்கள் செயல்களையும், எண்ணங்களையும் விமர்சனம் செய்யுங்கள். மாபெரும் லெனின் பட்டாளத்தில் ஒரு போர் வீரனாக இருக்க நான் தகுதி உள்ளவனா? தோழர் ஸ்டாலின் பெயரால் எடுத்துக்கொண்ட சபதத்தை விசுவாசத்துடன் மரியாதை செய்யத் திறமை உள்ளவனா? வரலாறு நம் மீது சுமத்துகிற எதிர்காலக் கடமைகளை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு நான் வளர்ச்சி அடைந்திருக்கிறேனா? இவையே நாம் விமர்சனம் செய்ய வேண்டிய எண்ணமும் செயலும் ஆகும்.

எங்களிடம் அனுதாபம் உள்ள நண்பர்களே! அது உங்களுக்கும் பொருந்தும். போராடுகின்ற மக்கள் அணியில் நீங்கள் எங்கு நின்றாலும் எந்தப் பகுதியில் இருந்தாலும் உங்கள் அனுதாபத்தைச் செயலில் காட்டுவது எப்படி? கட்சியோடு நெருங்கியத் தொடர்பு கொள்வது எப்படி? என்பனவற்றைப் பற்றி அடிக்கடி சிந்தியுங்கள். அவ்வாறு சிந்திப்பதினால் கட்சியின் அணிவகுப்பு முன்னேறிச் செல்லும் பொழுதும் அதனுடன் சேர்ந்து நீங்களும் முன்னேற முடியும். அதனால், உங்களுக்கு வழிகாட்டியாக இருந்து கொடிய போரில் உயிர் நீத்த தியாகிகளுக்குப் பதிலாக நீங்களே கட்சி அணியில் இடம் பெறுவீர்கள்.

சமீப காலம் வரை எங்களைப் பற்றி அறிந்து கொள்ளாதவர் களுக்கும் எங்கள் கட்சியைச் சந்தேகத்துடன் பார்த்து வந்தவர்களுக்கும் ஹிட்லரின் நாசகாரக் கும்பலை எதிர்ப்பதில் ஒன்றுபட்டு நின்றவர்களுக்கும் இது பொருந்தும். நீங்கள் மிக உன்னிப்பாக எங்களைக் கவனித்து வருகிறீர்கள். எங்கள் செயல்களைக் கூர்ந்து கவனிக்கிறீர்கள். ஆம், வெகு நுட்பமாக கவனியுங்கள். எங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் பாருங்கள். எங்களுடைய ஒவ்வொரு செயலையும் அலசி அலசி ஆராயுங்கள், விமர்சியுங்கள்.

www.padippakam.com


உங்களுக்குத் தெரியாமல் மறைக்க வேண்டியது ஒன்றுமில்லை. மக்களுக்குத் தெரியாமல் மூடி மறைக்க வேண்டியது யாதொன்றும் எங்களுக்கு இல்லை. உங்களுக்கு முன்னால் நாட்டு மக்களுக்கு முன்னால் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் மிகக் கடுமையான அக்கினிப் பரிட்சையில் நாங்கள் இறங்கியிருக்கிறோம்.

நாங்கள் போரில் புறமுதுகு காட்டினோம் என்றோ, ஏதோ ஒன்றில் தவறினோம் என்றோ, எங்களின் நேர்மையற்ற விரோதி கூட சொல்லத் துணியமாட்டான். கூர்ந்து கவனியுங்கள், இதற்கான காரணத்தை அறிவீர்கள். உலகின் பெரும்பகுதி இன்றைக்கு எங்களைப் புரிந்துகொள்ளத் தொடங்கியிருப்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள்.

மனித குலம் சுதந்திரமாகவும், சமாதானமாகவும், ஆனந்தமாகவும் வாழ்வதற்கு நாங்கள் கடைபிடிக்கும் வழியைத் தவிர,வேறு வழியே இல்லை. எங்களுடன் வராத ஒருவன் தனக்கே விரோதமாகப் போகிறான் என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

(எங்கள் நாட்டை நாங்கள் நேசிக்கிறோம்
என்ற நூலிலிருந்து)

படிப்பகம்

www.padippakam.com


## தீண்டாத வசந்தம்

### ஜி. கல்யாண ராவ்

வெளியீடு 2009

"வரலாறு எவ்வளவோ படித்தேன். டி.டி. கோசாம்பி, ரொமிலா தாப்பர், மஜூம்தார்... என்று எத்தனையோ படித்தேன். அவர்கள் புதிய அம்சங் களைக் கூறியிருக்கிறார்கள். புதிய கோணங்களைக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் அவற்றிலும் ஏதோ ஒன்று காணப்படவில்லை. என் பக்கம் தென்பட வில்லை. அந்தத் தேடலே 'தீண்டாத வசந்தம்'. சரித்திரத்தை என் முன்னோர்களின் பார்வையைக் கொண்டு பார்த்தேன். இந்த நாட்டிலே வர்க்கம் இருக்கிறது. அதன் பக்கத்திலேயே சாதியமிருக்கிறது. இங்கே காற்றுக்கும், பாசனக் கால்வாய்க்கும், விளையும் பூமிக்கும், கோயிலுக்கும், குளத்திற்கும், பள்ளிக்கூடத்திற்கும், ஊர் பொது இடத்திற்கும், உண்ணும் உணவுக்கும், குடிக்கும் தண்ணீருக்கும், உடுக்கும் உடைக்கும், பேசும் மொழிக்கும், இலக்கியத் திற்கும், கலாசாரத்திற்கும், அரசுக்கும், அதன் சட்டத்திற்கும், நீதிக்கும், நீதிமன்றத்திற்கும், பிணத் திற்கும் மயானத்திற்கும், சாமிக்கும், பேய்க்கும்கூட சாதி இருக்கிறது."



மக்கள் பதிப்பு
ரூ. *100/-*
பக்கங்கள் *392*

## வரலாறு என்னை விடுதலை செய்யும்

### ஃபிடல் காஸ்ட்ரோ

வெளியீடு 2009

வாக்களிக்கப்பட்ட நிலத்தை நோக்கி ஏக்கத்துடன் நடந்து செல்லும் மோசஸைப்போல ஒருபோதும் தனக்குச் சொந்தமாகாத நிலத்தில் சதா சர்வகாலமும் உழைத்துச் சாகும் விவசாயிக்கும் பாட்டாளிகளுக்கும் ஒரு தேசத்தையே சொந்த மாக்கிய கியூபப் புரட்சியின் நாயகன் ஃபிடல் காஸ்ட்ரோ. வரலாற்றை ஏகாதிபத்தியத்தின் நுகத்தடியிலிருந்து விடுதலை செய்யப்போராடும் ஒரு தத்துவத்தின் புதல்வரல்லவா? வரலாறு தேங்கி நிற்கும் போதெல்லாம் புயல் வீசும் உரைகளாலும் செயல்களாலும் காலத்தை முன்னோட்டும் காஸ்ட்ரோ நம் காலத்து நாயகனாக நம்மோடு வாழ்கிறார்.




மக்கள் பதிப்பு
ரூ. *20/-*
பக்கங்கள் *96*

படிப்பகம்

www.padippakam.com



## ஏகாதிபத்தியத்தின் உலகமயமாக்கல்

### ஃபிடல் காஸ்ட்ரோ

வெளியீடு 2009



மக்கள் பதிப்பு
ரூ. 60/-
பக்கங்கள் 240

ஃபிடல் காஸ்ட்ரோ உலகமயமாக்கல் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் மிகக் கூர்மையாக உற்று நோக்கி வருபவர். புதிய நூற்றாண்டில் காலடி வைக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் ஆற்றிய இந்த இரண்டு சொற்பொழிவுகளும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

ஏகாதிபத்தியத்தின் புதிய உலக ஒழுங்கமைப்பை பற்றி இதில் அவர் விமர்சிக்கிறார். ஏகாதிபத்தியம் புதிய வகைகளில் பொருளாதார சுரண்டலை எவ்வாறு நடத்தி வருகிறது என்பது பற்றியும் தேசிய இறையாண்மை மீது அது தொடுக்கும் தாக்குதல்கள் பற்றியும் பண்பாட்டு அடிபணிதல்களையும் ராணுவ ஆக்கிரமிப்புகளையும் அது எவ்வாறு செயல்படுத்து கிறது என்பது பற்றியும் ஃபிடல் காஸ்ட்ரோ இந்தச் சொற்பொழிவுகளில் விளக்கமாக எடுத்துக்காட்டுகிறார்.

## மார்ட்டின் லூதர் கிங்

### என். ராமகிருஷ்ணன்

வெளியீடு 2009



மக்கள் பதிப்பு
ரூ. 25/-
பக்கங்கள் 96

நண்பர்களே, ஆனால் நூறு வருடங்களுக்குப் பிறகும் கூட கறுப்பு இன மனிதன் இன்னும் விடுதலை பெறவில்லை; நூறு வருடங்களுக்குப் பிறகு கறுப்பு இன மனிதனின் வாழ்க்கையானது இன ஒதுக்கல் என்ற தீமையினாலும், பாகுபாடு என்ற விலங்கினாலும் மிகவும் மோசமாக முடக்கப்பட்டுள்ளது; நூறு வருடங்களுக்குப் பிறகு செழிப்பு என்ற ஒரு பெரும் கடலின் நடுவே வறுமை என்ற தனிமையான தீவில் கறுப்பு இன மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கிறான். நூறு வருடங்களுக்குப் பிறகு அமெரிக்க சமுதாயத்தின் மூலைகளில் கறுப்பு இன மனிதன் இன்னும் வதைபட்டுக் கொண்டிருக்கிறான். தன்னுடைய சொந்த நாட்டிலேயே தன்னை ஒரு அன்னியனாகவே அவன் காண வேண்டியுள்ளது.

என்னுடைய நான்கு சின்னஞ்சிறு குழந்தைகளும் தங்களுடைய தோலின் நிறத்தைக் கொண்டு தீர்மானிக்கப்படாமல், அவர்களுடைய ஒழுக்கத்தின் தன்மையைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்ற ஒரு நாட்டில் ஓர்நாள் வாழ்வார்கள் என்று கனவு கண்டேன்.

படிப்பகம்

www.padippakam.com



## ஃபிடல் காஸ்ட்ரோ உரைகள்

ஃபிடல் காஸ்ட்ரோவே குறிப்பிட்டதுபோல், இந்த உரை 'மான்கடா படைத்தளத்தின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல், அந்த நேரத்தில் புரட்சியின் வெற்றியைக் குறிக்கவில்லை' எனினும் அவருக்கெதிரான தண்டனை வழங்கக் கோரியவர்களை அது அம்பலப்படுத்தியது. புரட்சிகரச் சக்திகளிடையே ஒற்றுமையை உருவாக்கியது. அவர்களுக்கு திசை வழிகாட்டியது; வெற்றியின் மீதான நம்பிக்கையை அவர்களிடையே தோற்றுவித்தது. இறுதி வெற்றியை நோக்கிய போராட்டத்தைத் தொடரத் தேவையான நம்பிக்கையையும் தோற்றுவித்தது.

இன்றும்கூட பல நாடுகளுக்குப் பொருத்தமான இந்த உரை பொருளாதார சுதந்திரமும் முழுமையான உரிமையையும் பெற வேண்டிப் போராடும் நாடுகளுக்கு தத்துவார்த்த அரசியல் விளக்கத்தை அளிக்கிறது. இந்த உரை இன்றுள்ள வளரும் நாடுகளில் தேசிய விடுதலைக்கும், சோசலிசத் திற்குமான அறிக்கையாகும். ஒரு புதிய சமுதாயத்தை படைக்கப் போராடும் போர் வீரர்களுக்கு ஆதர்சமாயிருந்தது உத்வேகமூட்டி, உதவி புரியும் சிந்தனைகள் செறிந்த அருமையான பாடமாகும் இது.

மேலும் 1991இல் அவர் ஆற்றிய 'அமெரிக்காவிற்கு அடிபணிய மாட்டோம்' என்ற உரையும் 1994இல் 'மீண்டு எழுவோம்' என்ற உரையும் மற்றும் இரண்டு பின்னிணைப்புகளும் இத்தொகுப்பில் காணலாம்.

வெளியீடு 2009




மக்கள் பதிப்பு
ரூ. 20/-
பக்கங்கள் 80


## வெற்றி நமதே

### – சே குவேரா

### சே குவேரா படைப்புகளும் உரைகளும்

சே எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு செயல்வீரனாக விளங்கினார். அவர் ஆழமாகவும் சிந்தித்தார். அவருக்குக் கிடைத்த அனைத்தையும் படித்தார்; ஒவ்வொரு பிரச்சனையையும் ஆழமாக அணுகினார். ஃபிடல் குறிப்பிட்டது போல், "அவர் ஒரு புரட்சிகர கம்யூனிஸ்ட் உண்மையான கம்யூனிஸ்ட்; ஒழுக்கத்திலும் கட்டுப்பாட்டிலும் அவருக்குக் கரை கடந்த நம்பிக்கை இருந்தது; மனித மனசாட்சியின் மீது அவர் அளவற்ற நம்பிக்கை

வெளியீடு 2009




மக்கள் பதிப்பு
ரூ. 35/-
பக்கங்கள் 134

படிப்பகம்

www.padippakam.com



வைத்திருந்தார். அவர் மனித சமுதாயத்தில் கம்யூனிசம் கட்டி எழுப்பப்படுவதற்கான அடிப்படை விசையாக, மனிதனின் நல்லொழுக்கம் விளங்கும் என்பதை முழுமையான தெளிவுடன் கண்டார் என்று நாம் கூறவேண்டும்.'' ஆனால் முதன்மையாக அவர் ஒரு செயல்வீரர்; புரட்சிகர செயல்வீரர்.

அதுதான் அவரை கவுதமாலாவிற்கும், கியூபாவிற்கும், பொலிவியாவிற்கும் இட்டுச் சென்றது. அந்த நம்பிக்கையும் செயற்பாட்டுக் குணமும், இன்றைய புதிய 'சே'களை - மனிதன் மீது இன்னமும் நம்பிக்கை வைத்துள்ள மனிதர்களை, மனிதர்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் மதிக்கும் ஒரு மேன்மை யான சமுதாயத்தை - அனைத்து மனிதர்களும் முழு மனிதர்களாக ஒருவருக்கு ஒருவர் பரிமாற்றம் செய்து கொள்ளும் சமுதாயத்தை - நம்மால் நிர்மாணிக்க முடியும் என்பதை இன்னும் ஆழமாக நம்பும் மனிதர் களை, நாம் அதைச் செய்து காட்டுவோம் என்று இன்னும் மெய்ப்பித்துக் காட்டக்கூடிய மனிதர்களை - கூறவைத்துள்ளது “வெற்றி நமதே'' என்று.

- ஜான் கேரஸ்

## நவ சீனப் புரட்சியின் வரலாறு

### ஹோ கான் – சி

*1919*ஆம் ஆண்டு நிகழ்ந்த மே *4*ஆம் தேதிய இயக்கத்திலிருந்து *1956*ஆம் ஆண்டின் முற்பகுதி வரையிலான காலப்பகுதியில் சீன மக்கள் மேற் கொண்ட புரட்சி நடவடிக்கைகளைப் பற்றிய விரி வான சித்திரம் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார வர்க்க முதலாளித்துவம் ஆகியவற்றுக்கு எதிராக, சீன மக்கள் எவ்வாறு சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து நின்று போராடினார்கள் என்பதையும், புரட்சிகரமான மூன்று உள்நாட்டு யுத்தங்களையும், ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான யுத்தத்தையும் வெற்றி கரமாக நடத்தி முடித்த பின்பு, ஏகாதிபத்தியவாதிகள், கோமிங்டாங் ஆகியோரின் பிற்போக்குவாத ஆட்சியை எவ்வாறு தூக்கியெறிந்து சீன மக்கள் குடியரசை உருவாக்கினார்கள் என்பதையும் இந்நூல் விவரிக்கிறது. விடுதலைக்குப் பின்னர் தேசப் பொருளாதாரத்திற்கு உயிரூட்டப்பட்டதையும், விவசாயம், கைத்தொழில், தனியார்துறை, வியாபாரம் ஆகியவை சோசலிசப் பாதைக்கு மாற்றப்பட்ட

வெளியீடு 2009




மக்கள் பதிப்பு
ரூ. *200/-*
பக்கங்கள் *640*

படிப்பகம்

www.padippakam.com


தையும் குறிப்பிடுகிறது. பல்வேறு வரலாற்றுக் காலகட்டங்களிலும் சீன கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த கொள்கை நிலைப்பாடுகளைப் பற்றிய விரிவான செய்திகளும் சீனப் புரட்சியின் பிரத்தியேகத் தன்மைகளுக்குச் சீன கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைவரான மா சே - துங்கும் மார்க்சிய - லெனினியக் கொள்கை அடிப்படையில் வகுத்தளித்த நடை முறைக் கொள்கைகள் இந்நூலின் உயிரோட்ட மான பகுதியாக விளங்குகிறது.

## ஸ்பார்ட்டகஸ்

### ஹோவர்ட் ஃபாஸ்ட்

வெளியீடு 2009




மக்கள் பதிப்பு
ரூ. 100/-
பக்கங்கள் 496

உலகம் முழுவதிலுமுள்ள லட்சக்கணக்கான வாசகர்களின் சிந்தனையைத் தட்டியெழுப்பிய ஹோவர்ட் ஃபாஸ்ட்டின் பேனா முனையிலிருந்து சிதறிப்பாய்ந்த கண்ணைப் பறிக்கும் ஒளிக்கற்றை தான் ‘ஸ்பார்ட்டகஸ்’

ரத்தவெறி பிடித்த ரோமாபுரி ஆட்சியாளருக்கு எதிராக அடிமைகளை ஒன்று திரட்டி, ரோமாபுரியை யும் அதன் கருத்தோட்டங்களையும் ஒழித்துக்கட்ட தீவிரப் போராட்டம் நடத்தியவன் ஸ்பார்ட்டகஸ்.

ஸ்பார்ட்டகஸ் செய்த புரட்சி, வரலாற்று இரும்புக் கால்களின் கீழே நசுங்கிவிட்டது. சரித்திரத் தின் இருட்டறையில் அமிழ்ந்து போய் விட்ட அந்த உணர்ச்சிமயமான கதையை வெளிக் கொணர்ந்து ஹோவர்ட் ஃபாஸ்ட் நம் முன்னே வைத்துள்ளார்.

மனிதச் சமுதாயத்தில் பெரும்பான்மையினர் உடலை உருக்கி உழைத்துப் படைத்த செல்வச் சுகங்களை ஒருசிலர் தமதாக்கிக்கொண்டு சுரண்டிக் கொழுக்கும் காலம் தொடரும் வரை ‘ஸ்பார்ட்டகஸ்’ பெயர் எதிரொலித்துக்கொண்டே இருக்கும்; அது போர்க்குரலாய் நம்மை அழைத்துக் கொண்டே இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



## நினைவுகள் அழிவதில்லை

### நிரஞ்சனா

வெளியீடு 2008

கேரளத்தின் கையூர் கிராமத்தில் திரண்டெழுந்த விவசாயிகள் இயக்கத்தைத் தடிகொண்டு தாக்கிய கூலிப் பட்டாளத்தின் போலீஸ்காரன் ஒருவனை மக்கள் கொன்று வீசினர். ஆனால் 25 வயது கூட நிரம்பாத பச்சிளம் தளிர்களான மடத்தில் அப்பு, அபுபக்கர், சிறுகண்டன், குஞ்ஞம்பு நாயர் ஆகிய நான்குபேரும் கொலைக் குற்றத்துக்காகத் தூக்கிலேற்றப்பட்டனர். ஒரு இயக்கத்தின் கொடையாக இந்நால்வரின் மரணம் தேசத்துக்குச் சமர்ப்பணம்.




மக்கள் பதிப்பு
ரூ. 60/-
பக்கங்கள் 248

## இன்றைய இந்தியக் கல்வி சவால்களும் தீர்வுகளும்

வெளியீடு 2008

“கல்வி எல்லாச் சமூகங்களிலும் கடும் போட்டிகள் நடைபெறும் களமாகவே இருந்து வருகிறது. ஏனெனில், மக்கள் மனங்களை வார்த்தெடுக்கும் கருவியாகக் கல்வி இருப்பதால் இப்போட்டி உருவாகிறது. வரலாற்றின் பெரும் பகுதியான போராட்டம். நலன்களைக் காத்துக் கொள்வதற்காக மட்டுமன்று, தத்துவார்த்தத் தளத்தில் இப்போராட்டம் மனித மனதைக் கட்டுப்பாட்டில் வைக்க முயலும் சக்திகளுக்கும், அதற்கு விடுதலை அளிக்க முயல்வோருக்கும் இடையில் நடைபெறுகிறது. மேலோட்டமாகப் பார்த்தால். கல்வி, இருவேறு சக்திகளுக்கிடையேயான போராட்டக்களமாக உள்ளது. வர்க்கம், சாதி, ஆணின மேலாதிக்கங்களைத் தாக்கவல்ல கலாசாரத்தையும், கருத்துக்களையும் மனோபாவங்களையும் மீண்டும் உருவாகச் செய்யும் முயற்சிகள் ஒருபுறம் நடக்கின்றன. அதற்கெதிராக, மேலாதிக்கத்துக்கு ஆட்பட்டவர்கள், கல்வி என்ற கருவியின் மூலமாகவும், தாம் மேலாதிக்கம் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தும் முகமாக சமூக அமைப்பு இருப்பது போலவே நீடிப்பதற்கு எதிரான உணர்வுகள் எழுப்புகின்றனர்.’’




மக்கள் பதிப்பு
ரூ. 140/-
பக்கங்கள் 480

படிப்பகம்


www.padippakam.com


## ஏழு தலைமுறைகள்

### அலெக்ஸ் ஹேலி

வெளியீடு 2008

*கப்பல் கப்பலாக ஆப்பிரிக்கக் கண்டத்திலிருந்து கறுப்பின மக்களை அடிமைகளாக ஓட்டிக் கொண்டு சென்று விலைபேசி அமெரிக்கத் தெருக்களில் விற்ற கொடுமையின் நிழல் இன்றும் கவிந்து கிடக்கிறது அமெரிக்க தேசத்தின் மீது குண்ட்டாக்களின் போராட்டம் தொடர்கிறது. இன்னும், கடந்துசென்ற நூற்றாண்டுகளில் ஏகாதிபத்தியங்கள் ஏறிச்சென்ற படிக்கட்டுகளாக எத்தனை கறுப்பு மனிதர்களின் சடலங்கள் கிடக்கின்றன. இது அவன் கறுப்பன் என்பதால் மட்டும் ஏற்பட்டதல்ல. அவன் விலை மலிவு என்பதால்...*




*மக்கள் பதிப்பு*
*ரூ. 80/-*
*பக்கங்கள் 336*


## கல்விச் சிந்தனைகள்: லெனின்

வெளியீடு 2008

*கல்வியின் இலக்கு என்ன? எத்தகையக் கல்வி தேவை? மாணவனுக்கு ஆசிரியரா? ஆசிரியருக்கு மாணவனா? பாடங்களின் அமைப்பு எத்தகையதாக இருக்க வேண்டும். மனதை நெறிப்படுத்தும் பயிற்சிக்கான பாடங்கள் எது?*

*நெறியென்றால் எத்தகைய நெறி? உடல் ஆரோக்கியப் பயிற்சிக்கான பாடங்கள், விளையாட்டுத் திட்டங்கள் எத்தகையது? விஞ்ஞானத் தொழில் நுட்ப அறிவை போதிக்கும் பாடங்கள் பயிற்சிகளின் தன்மை, நோக்கம் எவ்வாறு அமைய வேண்டும்? குழந்தை உழைப்பைத் தடுக்க வேண்டுமா அல்லது எல்லை வகுத்து கல்வியோடு இணைக்க வேண்டுமா?*

*இக்கேள்விகள் உலகம் முழுவதும் மிகப் பெரும் விவாதங்களை அறிவுஜீவிகள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் உருவாக்கியுள்ளது. இதற்கு விடை காண லெனினது கல்விச் சிந்தனைகள் உதவிபுரியும்.*




*மக்கள் பதிப்பு*
*ரூ. 40/-*
*பக்கங்கள் 144*

படிப்பகம்

www.padippakam.com


## ஊறல் குழிகளிலிருந்து உரிமைப்போராட்டத்திற்கு...

**எஸ். சுதந்திரன்**

வெளியீடு 2008




மக்கள் பதிப்பு
ரூ. 25/-
பக்கங்கள் 80

எஸ்.ஏ. தங்கராஜன் அவர்களை நினைவு கூறுவது என்பது வெறுமனே நமது தலைவர்களைப் புகழ்வதற்கு அல்ல, நமது முதுகிலே நாமே தட்டிக்கொள்வதற்கும் அல்ல. மாறாக, அவரும் அவர் போன்ற தலைவர்களும் பெற்றிருந்த வேகத்தை, உறுதியை, வீரத்தை, லட்சிய தாகத்தை நாமும் பெறவேண்டும் என்று உறுதி கொள்வதற்காகத்தான். இன்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரும், தாழ்த்தப்பட்ட அடித்தட்டு மக்களுக்கான உரிமைப் போரும் சமுதாய சீர்திருத்தத்திற்கான, ஜாதிய கொடுமைகளுக்கு எதிரான, அனைத்து வகைகளிலும் சமத்துவத்திற்கான போராட்டம் தொடரவேண்டி யிருக்கிறது. தோழர் எஸ்.ஏ. தங்கராஜன் போன்ற தோழர்களின் அர்ப்பணிப்பு உணர்வை, உறதியை நெஞ்சில் ஏந்தி, இன்றையக் கடமைகளை நிறை வேற்ற உறுதி ஏற்போம்.

## மனிதர்கள் விழிப்படையும் போது

**கோதாவரி பாருலேகர்**

வெளியீடு 2008




மக்கள் பதிப்பு
ரூ. 125/-
பக்கங்கள் 384

காட்டு விறகுகளை எடுத்து சூளையில் எரித்துக் கரி உருவாக்கும் பக்குவத்தை அப்பழங் குடியினர் அறிந்திருந்தனர். ஒருமுறை அந்தச் சூளையில் பதம் தப்பியதால் குத்தகையாளருக்கு நஷ்டம் ஏற்பட்டது. அவன் கோபத்தில் வெறி கொண்டு, ஓர் ஆதிவாசியை எரியும் தீயில் தூக்கி எறிந்து சாம்பலாக்கினான். அடுப்புக்கரியை விடக் கேவலமாகவும் மதிப்புக் குறைந்தவர்களாகவும் அப்பழங்குடியின மக்கள் நடத்தப்பட்டனர். இது கொடூரத்தின் எல்லைதான்.

ஆனால், அதைவிடக் கொடுமை... உடனி ருக்கும் மனிதன், அருகில் இருந்து பழகியவன் தன் கண்முன்னே எரியும் நெருப்பில் எறியப்படும் கொடுமையைக் கண்டும் காணாததுபோல

படிப்பகம்

www.padippakam.com


இருப்பதும்... அதைத் தட்டிக் கேட்காதது மட்டு மல்ல பெருமூச்சுக்கூட விட முடியாத நிலையில் மற்றவர் இருப்பதும் கொடுமையிலும் கொடுமை யல்லவா...?


இப்பழங்குடியின மக்கள் எப்படி மாறினார்கள்? கல்வியறிவில்லாதவர்களும் எளியவர் களும் சாமர்த்தியமில்லாதவர்களுமான இவர்கள் எப்படிக் குறுகிய காலத்திற்குள் மாற்றமடைந்தனர்? விழிப்புற்றனர்? தங்களைச் சுரண்டக்கூடிய வர்களுக்கு எதிராக வீரமிக்க போராட்டத்தை எப்படி நடத்தினார்கள்? எங்கிருந்து அந்த சக்தி வந்தது?

இந்த வரலாற்றையும் தன் அனுபவங் களையும் எளிமையான நடையில் மிகவும் சிறப்பாக எழுதியிருக்கிறார் கோதாவரி பாருலேகர். இந்நூலுக்கு சாகித்திய அகாதமி விருதும் வழங்கப்பட்டது.

## ஒரு கம்யூனிஸ்டின் உருவாக்கம் மாவோ

### எட்ஹர் ஸ்னோ

வெளியீடு 2008




மக்கள் பதிப்பு
ரூ. 30/-
பக்கங்கள் 112

மார்க்சிய லெனினிசத்தின் புதிய படிநிலை வளர்ச்சிக்குச் சீனப்புரட்சியின் அனுபவங்கள் தகுந்த களமாக அமைந்தது. அதனை வளப்படுத்தி முன்னெடுத்துச் சென்றதில் தோழர் மாவோவின் வரலாற்றுச் சிறப்புமிக்க பாத்திரம் மகத்தானது. அவரது பங்களிப்பு தனியே சீன தேசத்திற்கு மட்டும் உரியதன்று. உலகப் பாட்டாளி வர்க்கத்திற்கும், சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் அது பெறுமதி மிக்க பொக்கிஷமாகும். மேற்கில் தோற்றம் பெற்று, ரஷ்யப் புரட்சியின் ஊடாக கிழக்கு உலகிற்குள் நுழைந்த மார்க்சிய லெனினியசத்தைக் கையேற்று, அதனைச் சீன நாட்டின் விசேச நிலைமைகளுக்கு ஏற்ப பிரயோகித்து வெற்றி கண்டு, ‘மேலைக் காற்றைக் கீழைக் காற்று மேவி நிற்கும்’ நிலைக்கு உந்துவிசை கொடுத்தவர் தோழர் மாவோ ஆவார். அவரது தத்துவார்த்த அரசியல் நடைமுறை வழிகாட்டுதல் இன்றும் நமது நாடு போன்ற வளரும் உலக நாடுகளின் மீட்சிக்கு ஒளி மிகுந்த வழிகாட்டியாக இருந்து வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com


## சூறாவளி

### எஸ். கிருஷ்ணாரெட்டி

1940இல் தீவிரமடைந்த ஹைதராபாத் சமஸ்தானத்தை எதிர்த்த தெலுங்கானா விவசாயிகளின் வீரம் செறிந்த ஆயுதந்தாங்கிய போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு தெலுங்கில் எழுதப்பட்ட நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும் இந்நூல்.

அன்றைய நிஜாம் சமஸ்தானத்தில் தெலுங்கானா விவசாயிகள் எண்ணிலடங்கா துன்ப துயரங்களை அனுபவித்தனர். தேஷ்முக்குகள் (மணியக்காரர்கள்), ஜமீன்தார்கள், போலீசார், ரெவின்யூ அதிகாரிகள், ரஜாக்கர்கள் என்னும் கொள்ளைக் கும்பல் போன்றோர் அம்மக்களுக்கு இழைத்த கொடுமைகளும் சித்திரவதைகளும் இந்நாவலில் வெகுவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இவர்களை எதிர்த்துத் தெலுங்கானா விவசாயிகள், சூறாவளியாய்க் கிளர்ந்தெழுந்து நடத்திய போராட்டங்கள், செய்த தியாகச் செயல்கள், புதிய சமுதாயம் காணவிழையும் இன்றைய தலைமுறைக்கு உத்வேகம் ஊட்டும் என்பதில் சந்தேகமில்லை.

'நினைவுகள் அழிவதில்லை' நாவலுக்குப் பின் அதே போன்று ஒரு போராட்டப் பின்னணியைக் கொண்ட நாவலான இந்தப் புத்தகத்தை வாசகர்களுக்கு அளிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

வெளியீடு 2007




மக்கள் பதிப்பு
ரூ. 40/-
பக்கங்கள் 136

## மகாத்மாக்கள்

### ஜி. வெங்கடேஸ்வர ராவ்

தெலுங்கானா புரட்சிப் போர்வீரர்களின் பவுதிக வலிமையையும் மனஉறுதியையும், வீரதீரச் சாகசங்களையும் உலகத்திற்கு எடுத்துச்சொல்ல விரும்பிய ஜி. வெங்கடேஸ்வர ராவ் தெலுங்கானா வீரபூமியைச் சுற்றி வந்திருக்கிறார். அப்போராட்டத்திலே நேரடியாகப் பங்குகொண்ட பல வீரர்களையும், வீராங்கனையரையும் சந்தித்துப் பேசி பயங்கர அடக்குமுறை தலைவிரித்தாடிய காலத்தில் மறைந்திருந்த பல வீர வரலாறுகளைத் திரட்டியிருக்கிறார். இவர் ஏற்கனவே செங்கொடிகள் என்ற நூலில் வீரர்களின் வரலாறுகளை மனதைக் கவரும் வகையில் எழுதி நமக்களித்திருக்கிறார்.

வெளியீடு 2007




மக்கள் பதிப்பு
ரூ. 50/-
பக்கங்கள் 158

படிப்பகம்

www.padippakam.com



ஒரு சில வீரர்களைக் கொண்டு மாபெரும் போராட்டங்கள் நடந்திட முடியாது. அவர்களுக்குப் பொதுமக்களின் ஆதரவு இருந்தால் மட்டுமே, யாரும் வெற்றிகொள்ள இயலாதவர்களாக அவர்கள் பரிணமிக்கிறார்கள். அந்த வீரர்களுக்குத் தம்முடைய தாய் தந்தையரும், மனைவி மக்களும், சகோதர சகோதரி களும் ஒத்துழைப்பு நல்கும்போதே அவர்களின் மன உறுதியும் உற்சாகமும் பல்கிப் பெருகும்.

உணவு வழங்குவோர், செய்திகளைத் தெரி விப்போர், ரகசியத் தொடர்புகளைப் பாதுகாத்து எல்லாவிதத்திலும் ஒத்துழைப்பவர்கள் இருந்தால் மட்டுமே அவ்வீரர்கள் பயங்கர விரோதிகளுக்குப் பலியாகாமல் இருப்பார்கள். வார்த்தைகளில் கூற இயலாத சித்திர வதைகள் செய்தபோதும், உடல், பொருள், ஆவி, மான, மரியாதைகள், கொள்ளை போய்க் கொண்டிருந்தாலும் நினைத்துப் பார்க்க முடியாத வகையிலேயே தியாக உணர்வுடன் நின்ற கோயா என்னும் பழங்குடியைச் சேர்ந்த சகோதரி பண்டி ராஜக்கா, பேரன்னை ஷெர்ரம்மா, மாவீரன் லிங்கையா, சலவையாளர், லம்பாடிப் பழங்குடியினர், முஸ்லீம் அன்னையர் பலர், தந்தையர் பலர் - இவர்கள் இல்லாவிட்டால் போராட்ட வீரர்கள் எத்தனை பேர் பகைவனுக்குப் பலியாகி இருப்பார்களோ தெரியாது.

அப்படிப்பட்ட சிறந்த மானிடர்களின் வாழ்க்கைக் கதைகளுடன், அவர்களுடைய குடும்பங் களின் லட்சிய வாழ்க்கையையும் இந்த மகாத்மாக்கள் நூல் மூலம் வாசகர்களுக்கு வெங்கடேஸ்வர ராவ் வழங்கியுள்ளார்.

வெளியீடு 2007

## தமிழ்நாட்டில் மூன்றடுக்கு பஞ்சாயத்து அரசாங்கம் சட்டம், விதிகள், திட்டங்கள்

### க. பழனித்துரை




ரூ. 300, பக்கங்கள் 904

தமிழ்நாட்டில் மூன்றடுக்கு பஞ்சாயத்து அரசாங்கம் எப்படிச் செயல்பட வேண்டும், மக்களுக்கு வசதிகளையும் வளர்ச்சியையும் கொண்டுவர என்னென்ன சாத்தியக்கூறுகள் இருக் கின்றன என்பதைப் பற்றி விரிவாக விளக்குகிறது இந்நூல். பஞ்சாயத்து அரசாங்கத்தை நடத்துவதற்கு அரசால் கொண்டுவரப்பட்ட விதிகளைப் பற்றியும் அதேபோல் பல புதிய கிராம வளர்ச்சித் திட்டங்களை

படிப்பகம்

www.padippakam.com


மாநில அரசும் மத்திய அரசும் அறிவித்துள்ளதைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறுகிறது. பஞ்சாயத்து அரசை நடத்துவதற்கு ஒரு வழிகாட்டு நூல் இது. இந்நூல் பொதுமக்கள், உள்ளாட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், அலுவலர்கள், அதிகாரிகள் போன்ற அனைவருக்கும் உதவிடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

## சோவியத் கம்யூனிஸ்ட் (போல்ஷ்விக்) கட்சியின் வரலாறு

வெளியீடு 2006




மக்கள் பதிப்பு
ரூ. 180/-
பக்கங்கள் 592

சோவியத் கம்யூனிஸ்ட் (போல்ஷ்விக்) கட்சியின் வரலாறு (சுருக்கமான பதிப்பு) கட்சியின் மத்திய கமிட்டி தேர்ந்தெடுத்த ஒரு குழுவினரால் தொகுக்கப்பட்டு முதன்முதலாக 1938இல் வெளியிடப்பட்டது. இந்நூல் எல்லா நேரத்திலும் எல்லா கம்யூனிஸ்ட்டுகளுக்கும் அவசியமானதொரு பாடநூலாக உள்ளது. இந்நூல் சோவியத்கம்யூனிஸ்ட் (போல்ஷ்விக்) கட்சியின் தலைமையில் சோவியத் யூனியன் உழைக்கும் மக்கள் சோசலிசத்தை அடைவதற்காகவும் உருவாக்குவதற்காகவும் நடத்திய போராட்டங்களிலிருந்து பெற்ற அனுபவத்தையும் பாடங்களையும் நமக்கு அளிக்கிறது. குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப மார்க்சிய லெனினிசத்தைப் பயன்படுத்துவது எப்படி என்பதை அனைத்து கம்யூனிஸ்டுகளுக்கும் கற்றுத் தருகிறது.

இந்நூல் சமூக வளர்ச்சி விதிகளைப் பற்றிய அறிவை ஊட்டி நம்மைப் பலப்படுத்துவதோடு உலகம் முழுவதும் கம்யூனிசத்தின் வெற்றி தவிர்க்க முடியாதது என்ற நம்பிக்கையை அளிக்கிறது. அனைத்து விதமான சந்தர்ப்பவாதிகள், இரட்டை நாக்குடையோர், சரணடைபவர்கள், மக்களின் எதிரிகள் ஆகியோரை எதிர்த்து கட்சியின் அணிகளைத் தூய்மைப்படுத்த நடத்திய போராட்டத்திலும் பூர்ஷ்வா கட்சிகளுடனான ஊசலாட்டமில்லாத அடிப்படையான போராட்டத்திலும், போல்ஷ்விக்குகள் ஊக்கம் பெறக் காரணமாக இருந்தது இந்நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடவும் நாற்றமெடுக்கும் முதலாளித்துவக் கலாச்சாரத்தை எதிர்த்துப் போராடவும் கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு சக்தி மிக்க ஆயுதமாக விளங்குகிறது.

படிப்பகம்

www.padippakam.com




நவீன திருத்தல்வாதம், மார்க்சிய - லெனினிசத்தின் மீதான தனது தாக்குதலில் இந்நூலை முதன்மையாகக் கருதி முழுமையாக இருட்டடிப்பு செய்தது.

இக்கலைக்களஞ்சியத்தை, மார்க்சிய - லெனினிச அறிவின் கருவூலப் பெட்டகத்தை, கம்யூனிஸ்டுகளின் முன்னணிப் படை வரிசையான இளம் தலைமுறையினரின் கல்விச் செல்வத்துக்கு உதவும் வகையில் வெளியிடுவதில் மிகவும் பெருமை அடைகிறோம்.

## இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டமும்

### வெகுஜனன் – இராவணா

வெளியீடு 2007



மக்கள் பதிப்பு
ரூ. 100/-
பக்கங்கள் 248

இன்று சிலர் வேண்டுமென்றும் சிலர் அறியாமையாலும் சாதியம் ஒழிந்துவிட்டதென்றும் தமிழ்த் தேசியமே அதை முறியடித்தது என்றும் பேசுகின்றனர். இரண்டுமே பொய்யானவை. சாதியம் இன்னும் ஒழியவில்லை. அதற்கான சான்றுகள் வெளி வெளியாகவே உள்ளன. ஆயினும் சாதிய ஒடுக்கு முறைக்குச் சாவுமணி அடிக்கப்பட்டாயிற்று. தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறார்கள். அந்த வெற்றிக்குத் தமிழ்த் தேசியம் எவ்வகையிலும் பங்களிக்கவில்லை.

அதை இயலுமாக்கியவர்கள் தாழ்த்தப்பட்ட வெகுசனங்களும் அவர்களோடு இணைந்து நின்று போராடிய நேர்மையான இடதுசாரி, சனநாயக, முற்போக்குச் சக்திகளுமேயாவர். அதை இயலுமாக்கியது மாக்ஸிய லெனினியவாதிகளின் வழிநடத்தலின் கீழ் அவர்கள் முன்னெடுத்த வெகுசனப் போராட்டப் பாதையே மேற்கூறிய வகையில் ஒரு வரலாற்று ஆவணமாகவும் இன்றைக்கும் பயனுள்ள போராட்டப் பாடங்களின் தொகுப்பாகவும் இந்த நூல் புதிய தகவல்களை உள்ளடக்கி மீளப் பதிப்பிக்கப் பெறுவது இன்று அவசியமான ஒரு சமூகக் கடமையினது நிறைவேற்றல் ஆகும். சமூக ஒடுக்குமுறைகட்கு முகங்கொடுக்கிறவர்களும் சமூகநீதிக்காகப் போராடுகிறவர்களும் இந்த நூலைக் கட்டாயம் ஊன்றிப் படிக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com


# மதமும் மார்க்சியமும்

## ந. இரவீந்திரன்

வெளியீடு 2006




மக்கள் பதிப்பு
ரூ. 80/-
பக்கங்கள் 295

**மதம் -**

இயற்கையுடன் தனக்கான உறவைக் கண்டறிய மனிதனால் உருவாக்கப்பட்டதே மதம். இயற்கையை வழிபடுவதாக முதல் முயற்சி யமைந்தது. தமக்குள் பிளவுபட்டுச் சாதிய - வர்க்க பேதம் முனைப்படைந்தபோது அப்பாலைத் தத்துவங்கள் தோன்றி வளர்ந்தன ; இயற்கையுடன் ஒன்றித்து, வாழ்ந்ததை இழந்து, தன்னையும் இயற்கையையும் படைத்து, காத்து, அழிக்கும் இறை ஒன்று எங்கோ இருப்பதான அப்பாலைத் தத்துவங்களின் தேடலில் மதபேதங்கள் வலுத்தன.

**மார்க்சியம் -**

சகலவகை ஏற்றத் தாழ்வுகளையும் தகர்த்து, பொதுவுடைமை அமைப்பைக் கட்டி யெழுப்பி, அனைவரும் சமவுரிமையோடு வாழ வழிகாட்டும் நெறி, மார்க்சியம். சாதிய - வர்க்க பேதங்களைத் தகர்ப்பதே அதன் பணி; மதத்தோடு மோதுவதற்கு அது இன்னொரு மதமல்ல. அதே வேளை, பேதங்களை வலுப்படுத்த முனையும் எந்த வடி வத்திலான கபடத்தனங்களையும் அம்பலப்படுத்து வதற்கு மார்க்சியம் தயங்குவதில்லை. சாதிய - வர்க்க பேதங்களை நியாயப்படுத்தும் கடவுளாய் இல்லாமல், விடுதலைக்குரல் எழுப்புவதற்கான கடவுளர்களை மதங்கள் கண்டறியும் போது மார்க்சியத்தை மதங்கள் அரவணைத்துள்ளன. இதற்கு உதாரணங்கள் பலவுண்டு.

**தமிழ்ப் பண்பாட்டுப் பார்வை -**

தமிழில் இயங்கிய உலகப் பண்பாட்டுரு வணக்கத்துக்குரிய முப்பெரும் ஆளுமைகள் வள்ளுவர், பெரியார், பாரதி. மதவடிவில் சமூக ஒழுங்கமைப் பைக் கட்டமைக்கும் சிந்தனையாளர் களிலிருந்து வேறுபட்டவர் வள்ளுவர். சாதியம், வர்க்கம், இனம், நாட்டுணர்வு, மதம் எனும் சகல வகைப் பேதங்களை யும் விட்டொழித்து, மனுக் குலத்துக்கான பொதுமை அறத்தைக் கண்டறிய முனைந்தது வள்ளுவம். அதற்கு இரண்டாயிரம் வருடங்களின் பின்னர் சகல மதங்களையும் நிராகரித்து, நாத்திக வாதத்தை வெகுஜன இயக்கத்தில்

படிப்பகம்


www.padippakam.com


பிரயோகித்து வெற்றிகண்டது பெரியாரியம். அதற்கான களம், பாரதியத்தினால் அமைக்கப் பட்டிருந்தது. மதங்கள் முன்னிறுத்திய அப்பாலைத் தத்துவங்களை நிராகரித்தவர் பாரதி; எங்கோ இருந்து அனைத்தையும் இயக்கும் கடவுள் என ஒன்றில்லை என்றவர். புதியபண்பாட்டு இயக்கத்துக்கான ஒரு செயல்வீரரின் வீச்சான கருத்தியலாகப் பாரதியம் திகழ்ந்தது. வள்ளுவம் - பெரியாரியம் - பாரதியம் எனும் இத்தகைய முப்பரிமாணங்கள் வாயிலாக மதத்தை மறுமதிப்பீடு செய்வதற்கு மார்க்சிய உலக நோக்கைப் பிரயோகிக்கிறது இந்நூல்.

வெளியீடு 2006

## டாக்டர் நார்மன் பெத்யூன் கதை அறுவைசிகிச்சைக் கத்தியும், போர்வாளும்

**சிட்னி கார்டன், டெட் ஆலென்**




மக்கள் பதிப்பு
ரூ. 125/-
பக்கங்கள் 425

இந்நூலின் முதல் ஆங்கிலப் பதிப்பு 1952இல் வெளியானது. பல லட்சம் பிரதிகள் விற்றன. செர்பிய, ஹீப்ரு, சீன மொழி உட்பட 19 மொழிகளில் வெளிவந்துள்ளது. இப்பொழுதும் இந்நூல் மூன்று கண்டங்களில் பல பதிப்புகளைக் கண்டுவருகிறது.

நார்மன் பெத்யூன் கனடாவின் புகழ்பெற்ற நெஞ்சக அறுவைச் சிகிச்சை மருத்துவராகத் திகழ்ந்தார். அது மட்டுமல்லாமல், அவர் ஓர் ஓவியர், கவிஞர், ராணுவ வீரர், விமர்சகர், ஆசிரியர், விரிவுரையாளர், மருத்துவ எழுத்தாளர் மற்றும் கோட்பாட்டாளராகவும் விளங்கினார். அவர் 1930களில் கொள்கைப் பிடிப்புள்ள கம்யூனிஸ்டாக உருவெடுத்தார். இது அவரை ஸ்பெயின் மற்றும் சீன யுத்த முனைக்கே இட்டுச்சென்றது.

1937 ஜூலையில், சீன-ஜப்பான் யுத்தம் தொடங்கிய ஆறு மாத காலத்தில் அவர் சீனாவை வந்தடைந்தார். அப்பொழுது வடக்கு சீனாவை ஜப்பான் ஆக்கிரமித்திருந்தது. பெத்யூன் யெனானை அடைந்து மா சே துங்கைச் சந்தித்தார். ஸ்பெயின் நாட்டு யுத்தத்தில் கிடைத்த அனுபவங்களை அவர் மாவோவிடம் எடுத்துக் கூறினார். மாவோ, உடனடியாக ஒரு நடமாடும் அறுவை சிகிச்சை

படிப்பகம்

www.padippakam.com



அமைப்பை உருவாக்கும்படி பெத்யூனைக் கேட்டுக் கொண்டார். அது முதல் வடக்கு சீனாவின் உட்பகுதியில் அமைந்த யுத்த மையத்தின் மையத்திற்கே சென்றார்.

அங்கே அவர் இரண்டு வருடங்கள் பணியாற்றினார். சில நேரங்களில் நாற்பது மணி நேரம் கூடத் தொடர்ந்து தூக்கம் இல்லாமல் அறுவை சிகிச்சை செய்தார். இந்த அசாதாரணமான அர்ப்பணிப்புத் திறனால் அவருடைய புகழ் அந்தப் பகுதி முழுவதும் பரவியது; பின் சீனா முழுவதும் சென்றுஅடைந்தது.

அறுவை சிகிச்சை செய்துகொண்டிருந்த இடத்திலிருந்து பத்து நிமிடத் தொலைவில் ஜப்பான் படை முன்னேறிக்கொண்டிருந்த ஓர் அழுத்தமான நிலையில் அறுவை சிகிச்சைக் கத்தி வெட்டியதைத் தொடர்ந்து செப்டிசீனியாவால் பாதிக்கப்பட்டு பெத்யூன் உயிர்நீத்தார்.


## சூறைக்காற்று வீசிய நாட்கள்

### [இந்திய விடுதலைப் போராட்ட நினைவுகள்]

### யஷ்பால்

வெளியீடு 2005

தேசிய இயக்கம் தூங்கியபோதெல்லாம் விடுதலை வேட்கை அணைந்துபோகாமல் அனல் வீசச் செய்த இளைஞர்களின் புரட்சிகர நடவடிக் கைகள் 'அகிம்சாவாதிகளுக்கு' வேண்டுமானால் தீவிரவாத நடவடிக்கைகளாகத் தோன்றியிருக்கலாம். ஆனால் மக்கள் அவ்விளைஞர்களைக் கொண்டாடி னார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோதும், தூக்கிலேற்றப்பட்ட போதும் ஆர்த்தெழுந்து ஆவேசத்துடன் போராடினர். தங்கள் பிள்ளைகளுக்கெல்லாம் பகத்சிங் என்றும் சந்திரசேகர் என்றும் துர்கா என்றும் பெயர் வைத்து அவர்தம் நினைவுகளைப் போற்றினர். இந்திய வரலாற்றில் சூறைக்காற்று வீசிய அந்த நாட்களில் கொல்லப்பட்ட இளைஞர்களின் மரணம் நாட்டு விடுதலைக்கே அர்ப்பணமாகி நிற்கின்றன.




மக்கள் பதிப்பு

ரூ. 40/-

பக்கங்கள் 208


படிப்பகம்

www.padippakam.com



# டாக்டர் துவாரகநாத் சாந்தாராம் கோட்னிஸ் கதை

வெளியீடு 2006



மக்கள் பதிப்பு
ரூ. 20/-
பக்கங்கள் 64

*1937 ஜூலையில் சீன - ஜப்பான் யுத்தத்தில் சீன மக்களுக்கு மருத்துவ உதவி செய்வதற்காக கனடா நாட்டு நார்மன் பெத்யூன் சீனம் சென்றார். யுத்த மையத்தின், மையத்திற்கே சென்று நடமாடும் அறுவை சிகிச்சை அமைப்பை உருவாக்கி அவர் இரண்டு வருடங்கள் பணியாற்றினார்.*

*அறுவை சிகிச்சைக் கத்தி வெட்டியதைத் தொடர்ந்து செப்டிசீனியாவால் பாதிக்கப்பட்டு பெத்யூன் உயிர் நீத்தார். அதே காலத்தில் இந்தியாவிலிருந்து டாக்டர் கோட்னிஸ் சீனாவிற்குச் சென்றார்.*

*டாக்டர் பெத்யூன் ஏற்படுத்திய சர்வதேசிய அமைதி மருத்துவமனையின் இயக்குநர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அவர் விட்டுச் சென்ற பணிகளை கோட்னிஸ் தொடர்ந்தார். அவரும் பெத்யூனைப் போலவே மருத்துவப்பணியின்போது அவரைப் பீடித்த நோய்க்கான மருந்து கிடைக்காமல் மாண்டார்.*

*1979ஆம் ஆண்டில் பெய்ஜிங் மக்கள் பதிப்பகத்தாரால் பிரசுரிக்கப்பட்ட டாக்டர் கோட்னிஸ் என்ற நூலின் ஐந்து அத்தியாயங்களின் சுருக்கம் இந்நூல். இந்நூலிற்கான விவரங்கள் சிறப்பாசிரியர் குழு ஒன்றால் தயாரிக்கப்பட்டன.*

*பெய்ஜிங் ராணுவத் தலைமையகத்தின் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த ஷென் சியான் காங் என்பவரால் இந்நூல் எழுதப்பட்டது. இந்நூலிற் கான தயாரிப்பில் டாக்டர் நார்மன் பெத்யூன் சர்வதேச அமைதி மருத்துவமனையைச் சார்ந்த லு ஜிஜான், ழாங் சாங்மன் ஆகியோரும் பங்குபெற்றனர்.*

*புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழக மொழிகள் துறையில் பகுதி நேரமாக சீன மொழி பயிற்று வரும் திருமதி ஷீலா மூர்த்தியால் மொழி பெயர்க்கப்பட்ட ஆங்கில ஆக்கத்தின் தமிழ் வடிவம் இந்நூல்.*

படிப்பகம்

www.padippakam.com



# இந்துத்துவக் காலச் சூழலின் மறுவாசிப்பில் பாரதியின் மெய்ஞ்ஞானம்

## ந. இரவீந்திரன்

வெளியீடு 2003




மக்கள் பதிப்பு
ரூ. 50/-
பக்கங்கள் 276

பாரதியின் மறைவுக்குப் பின்,

இந்துத்துவம் கோட்பாட்டுருவாக்கம் பெற்றுச் செயல் வடிவம் பூணத் தொடங்கியிருந்தது.

பாட்டாளி வர்க்கக் கட்சி உருப்பெற்றுத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் காத்திரமான பங்களிப்பை முன்னெடுக்கத் தொடங்கியது.

தமிழினத் தேசியத்துக்கான முன் தயாரிப்பாகச் சுயமரியாதை இயக்கம் தோற்றம் பெற்றது.

இவற்றிலே பாரதியை ஆதர்சமாய்க் கொண்டு இயங்கியோர்,

விபுலாநந்த அடிகள் முதல் பிச்சமூர்த்தி வரை இந்துத்துவத்தை நிராகரித்து மக்கற் நலநாட்ட ஆன்மீகத்தை வரித்துக் கொண்டனர்.

பாரதியை முன்னிறுத்தி ஜீவானந்தம் தொடக்கி வைத்த பொதுவுடைமைப் புத்துலகப் படைப்பாக்கத்துக்கான பிரசாரம் தொடர்ந்து வீறுநடை போடுகிறது.

பாரதி தொடர்ந்து வாழ்ந்திருப்பின் என்னைப் போன்றே இயங்கியிருப்பார் என்ற பாரதிதாசன் வழியில் பாரதியின் தமிழினப் பற்றும் தடம் பதித்தது.

முரண்பட்டு இயங்கிய இத்திசைவழிகளைத் தன்னுள் ஒட்டுமொத்தமாக முன்னதாய்க் கொண்டிருந்தமையினாலே பாரதி முரண்பாடுகளின் குவிமையமல்ல; அனைத்து முரண்பாடுகளதும் இயங்காற்றலைக் கவனத்திற்கொண்டு அவற்றின் தீர்வுக்கான செயற்பாடுகளை வெளிப்படுத்தியவர். அதேவேளை, பிரதான முரண்பாட்டுத் தீர்வை முதன்மைப்படுத்திப் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியைத் தகர்த்தெறியும் போராட்டத்துக்குத் தீர்க்கமான முன்னுரிமையைக் கொடுத்தவர்.

அதற்கென மக்களைக் கிளர்ந்தெழத்தூண்டும் அனைத்து வடிவங்களையும் கையாண்டவர். அல்லது ஆதரித்தவர். எமக்கேயான வரலாற்றுச் செல்நெறியை

படிப்பகம்

www.padippakam.com



அதன் பன்மைப் பரிமாணத்தில் கண்டு அடுத்த கட்டத்துக்கான சமூக மாற்றப் போக்கை வெளிப்படுத்தியவர். அதன் பேறாக இந்தியச் சிந்தனை மரபின் போர்க்குணப் பக்கத்தைக் கையேற்றுத் தன்கால வளர்ச்சி மட்டத்துக்கு ஏற்றதாக விருத்தி செய்து பிரயோகித்தவர். அதன் சாரமாய் முகிழ்த்த பாரதியின் மெய்ஞ்ஞானத்தின் அடிப்படையாய் விளங்கும் இயங்கியல் பொருள் முதல்வாதம் சரியாக இனங்காணப்படுதலவசியம்.

பாரதியின் முரணற்ற முழுமையைக் காண வலியுறுத்தும் இந்த நூல் இந்துத்துவத்தை வீழ்த்தும் சரியான பேராயுதத்தைக் கண்டடைய வழிகாட்டும். எமக்கான புதிய பாதையை வகுப்பதற்கு பாரதியின் சிந்தனை முறைமை இன்றைய காலகட்டத்துக் கானதாய் வளர்க்கப்படுதல் அவசியம்.

## இந்துத்துவம்
## இந்து சமயம் சமூக மாற்றங்கள்

### ந. இரவீந்திரன்

வெளியீடு 2003



மக்கள் பதிப்பு
ரூ. 65/-
பக்கங்கள் 336

**இந்து சமயம் -**

சமயமல்லாத சமயமாக இருந்தவாறு இனக்குழுக்களின் குலதெய்வங்கள் பலவற்றுடன் வர்க்க சமூகத்துக்கேயுரிய முழுமுதற் கடவுள் ஒன்று சகவாழ்வு மேற்கொள்ளும்படி செய்த தத்துவநெறி; இனக்குழு வாழ்முறையை வர்க்க சமூக அமைப்பு மாற்றங்களுக்கு இயைபுபடுத்தும் வகையில் சாதியாக மாற்றிய மதம்; சாதிகளின் சமயம்; பல நூறு வருடங்கள் நீடித்தபடியே புதியன ஏற்றுப் பழையன பேணியவாறு மாற்றமுறாதது போன்ற தோற்ற முடையது. பக்திப் பேரியக்கத்தினூடாக அரசியல் சமூக மாற்றத்துக்கு வித்திட்டதும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டக் கருத்தியலை வழங்கியதுமான இந்தச் சமயம், இந்துத்துவ ஒடுக்குமுறை வடிவங் கொள்வது எப்படி?

**சாதியம் -**

இனக்குழுக்கள் தகர்ந்து வர்க்கங்கள் உருவாக இடந்தராமலே இன்று வரை இரத்த உறவுக்குல முறை சாதிய வடிவம் ஏற்று, சமூகக் குழுக்கள் இணங்கியும் பிணங்கியும் பிளவுபட்ட சமூகமாக இந்து

படிப்பகம்

www.padippakam.com



வாழ்முறை நீடிப்பதற்கான அடிப்படை என்ன? அதற்கான உந்துவிசை எந்த வலிய சக்தியிடமிருந்து பெறப்பட்டது?

**மூன்றாவது சக்தி -**

சிந்துவெளிச் சமூகத்தின் வர்க்கச் சிந்தனை முறைமையும் இனக்குழு வாழ்முறை கொண்ட ஆரியரது வர்ணக் கருத்தியலும் இணைந்து சாதியத்தை வலிய கருவியாகக் கொண்டு இயங்கும் இந்து சமயத்துக்கு நிலைபேறாண வரலாற்றுத் தொடர்ச்சி யுடைய உயிர்ப்பைக் கொடுத்த மூன்றாவது சக்தி புதிய இனக்குழுக்கள். இதன்பாலான கவன ஈர்ப்புடன் கடந்த காலத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்தினால் புதிய விளக்கங்களும் மக்கள் இயக்கத்துக்கான உயிர்த் துடிப்புள்ள மார்க்கமும் கிடைக்காதா?

இவையும், இவை சார்ந்த பிற விவாதங்கள் பலவும் இந்நூலில்!

## புரட்சிகளின் நூற்றாண்டு

### அய்ஜாஸ் அகமத்

வெளியீடு 2003



மக்கள் பதிப்பு
ரூ. 25/-
பக்கங்கள் 96

இருபதாம் நூற்றாண்டு மனிதகுல வரலாற்றில் மறக்கமுடியாத, மகத்தான நூற்றாண்டு, உலகெங்கிலும் புதிய நூற்றாண்டையும், புத்தாயிரம் ஆண்டையும் வரவேற்றுக் கொண்டாடப்பட்ட விழாக்களும், ஆரவாரங்களும் ஓய்ந்து போன நிலையில் கடந்துபோன நூற்றாண்டைத் திரும்பிப் பார்க்கும்போது அது விட்டுச்சென்ற சாதனைகளும், வேதனைகளும், எழுச்சிகளும், வீழ்ச்சிகளும், புரட்சிகளும், எதிர்ப்புரட்சிகளும் இன்னும் ஏராள மான வரலாற்றுப் பதிவுகளும் மனக்கண்ணில் நிழ லாடுகின்றன. பிரபல வரலாற்றறிஞர் எரிக் ஹோப்ஸ்பாம் இதை 1914இல் துவங்கி 1989இல் முடி வடைந்த குறுகியகால நூற்றாண்டு என வர்ணிக் கிறார். பல நம்பிக்கைகளையும், எதிர்பார்ப்புகளையும் உருவாக்கிய இந்த நூற்றாண்டு மனிதகுலத்தின் மகத்தான கனவுகளுக்கு தனது பதிலாக தோல்வி களையும், நிராசைகளையும் கொடுத்துள்ளது. இந்நூலின் கட்டுரைகளை எழுதிய மார்க்சிய அறிஞர் அய்ஜாஸ் அகமது கூறுகிறார்: "21ஆம் நூற்றாண்டு இன்னும் துவங்கவில்லை. பின்னடைவுகளை பின்னடையச் செய்யாமல் அது துவங்க முடியாது."

படிப்பகம்


www.padippakam.com



# சினிமா
# ஓர் அற்புத மொழி

### எம். சிவகுமார்

வெளியீடு 2003



மக்கள் பதிப்பு
ரூ. 25/-
பக்கங்கள் 126

சினிமா மொழி தனக்கு முன்பு இருந்த பல்வேறு கலை வடிவங்களை வெகு சர்வ சாதாரண மாகப் பயன்படுத்திக் கொண்டது. அவற்றை தன்னோடு இணைத்து இழைத்துக் கொண்டது. 1930இல் சினிமா பேசத் தொடங்கியபோது, எழுத்தாளர்களை அது தன்னோடு இழுத்துக் கொண்டது. சினிமாவில் வண்ணம் வந்த பொழுது, ஓவியர்களை அது தன் பட்டியலில் சேர்த்துக் கொண்டது. அதுபோல் இசைக் கலைஞர்களை, கட்டடக் கலைஞர்களை தனதாக்கிக் கொண்டது. இவர்கள் எல்லாம் தங்கள் கலையின் சிறப்பம்சங்களை சினிமாவுக்காக தந்தாலும், சினிமா அவற்றை யெல்லாம் சீரணித்து தனித்ததொரு மொழியாய் நின்றது. சினிமா தன்னிலிருந்தே தன்னை தொடர்ந்து கண்டுபிடித்தது. அதுவரை இல்லாத தொழில் நுட்பக் கலைஞர்களை உருவாக்கியது. ஒளிப்பதிவாளர், இயக்குநர், படத்தொகுப்பாளர், ஒலிப்பதிவாளர், கலை இயக்குநர்... என்று பலரை உருவாக்கியது. இவர்கள் சினிமாவின் வளர்ச்சியினூடே தங்கள் தொழில் நுட்பங்களை மேலும் மேலும் செழுமைப் படுத்திக் கொண்டனர்.

சினிமா பார்ப்பதில் நாம் இன்று நான்காவது தலைமுறையினர், நான்கு தலைமுறைக்குள் சினிமா நமக்கு பழகிவிட்டது. நம் கலாச்சார ஞாபகப் பதிவின் ஆழத்துக்குச் சென்றுவிட்டது. நம் பழக்க வழக்கங் களை அது வெளிப்படுத்துகிறது. சினிமா ஒளியாய், ஒலியாய், பிம்பங்களாய், சப்தங்களாய் இருபத்து நான்கு மணி நேரமும் நம்மை சுற்றி ஆறு போல் ஓடுகிறது. அதில் நாம் சுலபமாக நீந்துகிறோம். அதன் வேகம் வெள்ளப்பெருக்கு நமக்கு புதிதாய் இருப் பதில்லை. ஆனாலும் பல நேரங்களில், இந்த ஆற்றின் அழுக்கும் அவலமும் நம்மை மூச்சு முட்ட வைக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# ஞெகிழி

## பூவுலகின் நண்பர்கள்

நாம் இன்று ஞெகிழிப் பொருட்களுக்குக் கொடுக்கும் விலை, அதன் உருவாக்கத்திற்கு மட்டுமே. ஆனால் அதனுடைய தாக்கத்தால் சுற்றுச்சூழலில் ஏற்படும் கடுமையான விளைவுகளுக்கான செலவை அதில் கணக்கிடுவதில்லை. அச்சிக்கல்களுக்கான செலவுகளையும் சேர்த்து ஞெகிழிப் பொருட்களுக்கான விலையை கணக்கிடத் தொடங்கினால், ஞெகிழியின் விலையும் கூடும், ஞெகிழிப் பொருட்களின் பயன்பாடும் வெகுவாகக் குறையும்.

இரண்டாம் உலகப் போரின் போது அணுகுண்டுகள் எப்படிக் கடுமையான விளைவுகளை உண்டாக்கினவோ அதே போன்று இரண்டாம் உலகப்போரின் போது கண்டுபிடிக்கப்பட்ட ஞெகிழியும் இன்று அணுகுண்டுகளைப் போலவே அதிக பாதிப்புகளை உருவாக்கி வருகிறது.

வெளியீடு 2003




மக்கள் பதிப்பு
ரூ. *20/-*
பக்கங்கள் *64*

படிப்பகம்

www.padippakam.com



## சவுத் விஷன் புத்தக விலைப் பட்டியல்

| நூல் | ஆசிரியர் | பக் - | விலை |
|---|---|---|---|
| ○ நேற்று மும்பை இன்று குஜராத் நாளை? | கட்டுரைத் தொகுப்பு | 126 | 25.00 |
| ○ குஜராத் இனப் படுகொலைகள் 2002 | தீஸ்தா செதால்வட் | 168 | 30.00 |
| ○ காவியக் குயில் (தமிழ்ஒளி படைப்புகள்) | சங்கை வேலவன் | 112 | 20.00 |
| ○ வகுப்புவாத அச்சுறுத்தலும் மதச்சார்பின்மை சவால்களும் | கே.என். பணிக்கர் | 219 | 40.00 |
| ○ மதச்சார்பின்மை நடவடிக்கைக்கான கையேடு மதச்சார்பற்ற சமூகங்களை உருவாக்கி வளர்த்திடுவதற்கான கையேடு | அஜீத் முரிக்கான் | 152 | 30.00 |
| ○ புராணங்களும் பி.ஜே.பி.யின் புரட்டும் | வே. மீனாட்சிசுந்தரம் | 72 | 15.00 |
| ○ இயங்கியல் முறையில் சில பயிற்சிக் கட்டுரைகள் | டி.டி.கோசாம்பி | 138 | 30.00 |
| ○ மரபும் மார்க்சியவாதியும் | சி.சிவசேகரம் | 64 | 12.00 |
| ○ 20ஆம் நூற்றாண்டு ஓவியம் | கெ.றொ. கொண்ஸ்ரென்ரைன் | 94 | 30.00 |
| ○ On Education | | 128 | 15.00 |
| ○ Towards the Future | | 104 | 12.00 |
| ○ Taking Sides - Why health care does not reach the poor | | 128 | 80.00 |
| ○ சி. கோவிந்தராஜன் - சுதந்திரப் போராட்டத்திலிருந்து சமுதாயப் புரட்சிக்கு | என். ராமகிருஷ்ணன் | 160 | 30.00 |
| ○ கலாநிதி ந. சுப்பிரமணியனின் ஆய்வுகள், பார்வைகள், பதிவுகள் தொகுதி : 1 | கௌசல்யா சுப்பிரமணியன் | 488 | 125.00 |
| ○ கலாநிதி ந. சுப்பிரமணியனின் ஆய்வுகள், பார்வைகள், பதிவுகள் தொகுதி : 2 | கௌசல்யா சுப்பிரமணியன் | 536 | 125.00 |
| ○ காலத்தின் குரல் | கௌசல்யா சுப்பிரமணியன் | 536 | 125.00 |
| ○ டாக்டர் இல்லாத பெண்களுக்கு பெண்களுக்கான ஓர் ஆரோக்கிய வழிகாட்டி | | தொகுதி : 1 | 200.00 |
| ○ டாக்டர் இல்லாத பெண்களுக்கு பெண்களுக்கான ஓர் ஆரோக்கிய வழிகாட்டி | | தொகுதி : 2 | 200.00 |

படிப்பகம்

www.padippakam.com


# மக்கள் பதிப்பு விலையில் வெளியிடவிருக்கும் மறுபதிப்புகள்

## நாடு அழைத்தது

மேஜர் ஜெய்பால் சிங்

ஒத்துழையாமை இயக்கத்தின்போது தன் முதுகில் விழுந்த அடிகளால் ஏற்பட்ட தழும்புகளுக்குப் பழிதீர்க்க அதே பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்ந்து இரகசியக் குழுக்களை ஆரம்பித்து காங்கிரஸ் தலைமையால் வஞ்சிக்கப்பட்டு 1946 கப்பற்படை எழுச்சிக்கு நேரடியாக உதவும் நோக்குடன் ராணுவத்தை விட்டுத் தப்பி வெளியேறி தெலுங்கானா புரட்சிக்கு ஆயுதப் பயிற்சியளித்து 1956 வரையிலும் தலைமறைவாகவே வாழ்ந்து பின் மக்கள் மத்தியில் பகிரங்கமாக வாழ வந்த அவரை கோர்ட்டில் நிறுத்தி அரசாங்கம் கேள்வி கேட்டது; "ஒரு ராணுவ வீரனாகிய நீ சட்ட திட்டங்களையெல்லாம் மீறி ராணுவ முகாமை விட்டு எப்படி ஏன் வெளியேறினாய்?'' தோழர் ஜெய்பால் சிங் ஒற்றை வரியில் பதில் சொன்னார்: "நாடு அழைத்தது, போனேன்''




மக்கள் பதிப்பு
ரூ. 50/-
பக்கங்கள் 204

## இந்தியத் தத்துவஇயலில் நிலைத்திருப்பனவும் அழிந்தனவும்

இந்நூல் மதச்சார்பின்மை, பகுத்தறிவு, அறிவியல் நோக்கு என்கிற அடிப்படையில் இந்தியத் தத்துவ இயலின் பாரம்பரியத்தை ஆராய்கின்ற நூலாகும்.

இந்தியத் தத்துவ இயல் மரபிற்கு எதிரான கருத்துக்கள், அணுகுமுறைகள் பழமையின் பாரமாகக் கருதப்படுகின்றன. இருப்பினும் பண்டைய மற்றும் மத்தியகால இந்தியாவில், நடைபெற்றது போலவே பிற்போக்குச் சக்திகளும், மீட்புவாதச் சக்திகளும், இன்றைய இந்திய முன்னேற்றத்தைத் தடுத்திட முயற்சிக்கிறது.

இந்நூலாசிரியர், இதன் சமூக அடிப் படையை ஆணித்தரமாக எடுத்துரைப்பதன் மூலம், இந்திய அறிஞர்கள் தேசியப் பெருமையுடன், தங்களின்




மக்கள் பதிப்பு
ரூ.
பக்கங்கள்

படிப்பகம்

www.padippakam.com


உண்மைத் தேடலையும், பிற்போக்குச் சக்திகளையும், மீட்புவாதச் சக்திகளையும் எதிர்த்துப் போரிட முடியும் என்று வலியுறுத்துகிறார்.

வார்த்தை ஜாலங்கள், மேதாவித்தனம் இல்லாமல் பண்டைய மற்றும் முந்தியகால இந்தியாவில் நடைபெற்ற தத்துவார்த்துப் போராட்டத்தை மிகவும் தெளிவாக அதே நேரத்தில், இந்திய தத்துவ இயலை முதன்முறையாகப் படிப்பவருக்குப் புரியும்படி இந்நூலை இயற்றியிருக்கிறார் தேவி பிரசாத் சட்டோபாத்யாய.

1918ஆம் ஆண்டு பிறந்த தேவிபிரசாத் சட்டோபாத்யாய கல்கத்தா பல்கலைக்கழகத்தின் B.A., M.A., தத்துவ இயல் பட்டம், முதல்வகுப்பில் பெற்றார். S.N. தாஸ் குப்தாவின் வழிகாட்டுதலில் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார், 1943ஆம் ஆண்டு முதல் சட்டோபாத்யாய, கல்கத்தா மற்றும் பம்பாயின் பல கல்லூரிகளில் தத்துவ இயலைக் கற்பித்துவந்தார். வங்காள மொழியில் நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியவர். 'லோகாயுதா: பண்டைய இந்தியப் பொருள்முதல்வாதத்தைப் பற்றிய ஆய்வு' (புதுடெல்லி 1959: ருஷ்ய பதிப்பு மாஸ்கோ 1961): "இந்தியத் தத்துவஇயல்: எளிமையான அறிமுகம்'' (புதுடெல்லி 1964. ஹிந்தி பதிப்பு டெல்லி 1965; ருஷ்ய பதிப்பு, மாஸ்கோ 1966; மலையாளப் பதிப்பு திருச்சூர் 1971; ஜெர்மன் பதிப்பு பெர்லின் 1976; "இந்திய நாத்திகம் - ஒரு மார்க்சிய ஆய்வு'' (கல்கத்தா 1969, ருஷ்ய பதிப்பு, மாஸ்கோ 1973) மேற்கூறிய நூல்களை இயற்றியதன் மூலம் சட்டோபாத்யாய, இந்திய தத்துவ இயலை மார்க்சியக் கண்ணோட்டத்தில் விளக்குகின்றவராக உலகில் பிரபலமானார். 1972இல் அவருக்கு சோவியத் நாடு நேரு பரிசு கிடைத்தது. 1973ஆம் ஆண்டு வார்சாவில் நடந்த 15வது தத்துவ இயலின் உலக மாநாட்டில் உதவித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1975ஆம் ஆண்டு பெர்லினில் உள்ள ஜெர்மன் விஞ்ஞான சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இந்த அந்தஸ்தைப் பெற்ற முதல் இந்தியர் இவரே ஆவார்.

சட்டோபாத்யாய மாணவப் பருவத்திலிருந்தே அரசியல் போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது மட்டுமல்லாமல் முற்போக்குக் கொள்கைக்கான தத்துவப் போராட்டத்தில் முன்னணியில் இருந்துகொண்டு, ஆய்வு

படிப்பகம்

www.padippakam.com



வேலைகளையும் தொடர்ந்தார். 1959ஆம் ஆண்டு முதல் "இந்திய ஆய்வு நடந்தவையும் நடப்பவையும்" என்கிற காலாண்டிதழைப் பதிப்பித்து வருகிறார். டாக்டர் எம். கங்கோ பாத்யாயாவுடன் சேர்ந்து இரண்டு பாகங்களாக "நியாய தத்துவ இயல்" பற்றிய நூல் இயற்றினார். "தாரநாதரின் இந்தியாவில் புத்தமதத்தின் வரலாறு" என்கிற நூலைப் பதிப்பித்தவரும் ஆவார்.

## புரட்சிப் பாதையில் எனது பயணம்

### பி. சுந்தரய்யா




மக்கள் பதிப்பு ரூ.

பக்கங்கள்

'என் வாழ்க்கை பூராவும் என் திறமைகள் அனைத்தையும் மனித சமுதாய விடுதலை என்னும் மகோன்னத லட்சியத்திற்கே அர்ப்பணித்தேன் - என்று கண்ணை மூடும்போது நினைக்கும்படி வாழ்வதுதான் மனித வாழ்க்கைக்குப் பெருமை அளித்திடும்' என்கிறார், புகழ் பெற்ற சோவியத் எழுத்தாளர் ஆஸ்ட்ரோவ்ஸ்கி.

இந்த இலக்கணத்துக்கு ஒப்ப தனது வாழ் நாளை நடத்தி முடித்தவர் தோழர் பி. சுந்தரய்யா என்பதை அவரது சுயசரிதையான 'புரட்சிப் பாதையில் எனது பயணம்' என்று இரண்டு பாக புத்தகத்தைப் படிப்போர் உணர்ந்துகொள்ள முடியும்.

முதல் பாகத்தில் அவரது பால பருவம், விடுதலைப் போராட்டம், கட்சியின் ஆரம்ப நாட்கள், திருமணம் எனத் தெலுங்கானாப் போராட்டத்தின் ஆரம்ப நாட்கள் வரை விவரித்துள்ளார். இரண்டாம் பாகமான இப்புத்தகத்தில் தெலுங்கானாப் போராட்டம், சி.பி.ஐ. (எம்) கட்சியின் தோற்றம் ஆகியவற்றில் இவரின் பங்கை விவரித்துள்ளார்.

## ஒரு பண்ணை அடிமையின் விடுதலைப் போராட்டம்

### என். ராமகிருஷ்ணன்




மக்கள் பதிப்பு ரூ. 25/-

பக்கங்கள் 96

ஒரு பண்ணை அடிமைக் குடும்பத்தில் பிறந்து, அந்த சமூகத்தின் கொடுமைகளை அனுபவித்து, அவதிக்கு ஆளாகி, அதற்கெதிராக வெகுண்டெழுந்த ஒரு போராட்டக்காரரின் வரலாறே இந்நூல். இது மெருகேற்றிய சரிதை அல்ல. பண்ணை

படிப்பகம்

www.padippakam.com


அடிமை சமூகத்தின் ஒவ்வொரு அவலக் கூறுக்கும் ஆட்பட்ட, பட்டுணர்ந்த மனிதரின் உண்மை வரலாறு. பண்ணை அடிமை சமூகத்தின் ஒடுக்குமுறைக்கு ஆளான கடைசி வரிசைப் பிரதிநிதிகளில் பி.எஸ். தனுஷ்கோடியும் ஒருவர். அவரது சுருக்கமான வரலாறே இந்நூல். அனைத்திற்கும் மேலாக, ஊமைகளாய் வாழ்ந்து வந்த ஒடுக்கப்பட்ட மக்களை உத்வேகங்கொள்ளச் செய்து உரிமைகளை அவர்கள் அடையச் செய்த விவசாயிகள் இயக்கத்தின் சாதனையை எடுத்துக் கூறுவது இந்நூல்.

## உடைந்து நொறுங்கிய நாகரிகம்

### லேன்ஸி ஃபெர்ணான்டஸ் சத்தியஜித் பட்கல்




மக்கள் பதிப்பு
ரூ. 50/-
பக்கங்கள் 188

இன்று இந்தியாவை துன்புறுத்தும் பயங்கர மான அரசியல் சமூகப் பிளவுகளுடைய தோற்றுவாய் எது? அனைத்து அரசியல் சித்தாந்தங்களும் கட்சிகளும் தங்களுடைய கவர்ந்திழுக்கும் சக்தியை ஏன் இழந்திருக்கின்றன?

சாதிய சமூகக் கட்டமைப்பில் முதலாளித்து வம் எவ்வாறு ஒரு வரலாற்று நாகரிகப் பெயர்வை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இந்நூல் எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் இந்திய முதலாளித்துவம் சாதியத்தால் எவ்வாறு உருக்குலைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. இந்த நாகரிகப் பெயர்வு எவ்வாறு தன்னுடைய முற்போக்கு பாத்திரத்தை இப்பொழுது முற்றிலுமாக இழந்து வெறுமையாக நிற்கிறது என்பதை விளக்குவதுடன் ஒன்றன் பின் ஒன்றாகக் குழப்பத்தை தோற்றுவிக்கிறது என்பதையும் விளக்குகிறது. இந்துத்துவவாதிகள் நேரு வழியை எதிர்த்து அறைகூவல் விடுக்கும் மையக் களத்துக்கு எவ்வாறு வந்தார்கள் என்பதை நன்கு புரிந்து கொள்ள உதவும் சமூக அரசியல் பின்புலத்தையும் எடுத்துரைக்கிறது.

உலகமயமாக்கலின் அவலங்களில் சிக்கிக் கொண்டிருக்கும் இந்தியாவுக்கு இரண்டாவது நாகரிகப் பெயர்வு முற்றிலுமாக தேவைப்படுகின்றது என்பதையும், நாட்டை எதிர்நோக்கியுள்ள குழப்பம் இதனால் தீர்த்து வைக்கப்படும் என்பதையும் இந்த ஆசிரியர்கள் வலியுறுத்துகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



## நாம் அறியாத அம்பேத்கார்

### என். ராமகிருஷ்ணன்




மக்கள் பதிப்பு ரூ. 40/-
பக்கங்கள் 168

தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் பிறந்து, சமூக ஒடுக்குமுறைத் தன்மையினால் அல்லலுற்று, அடிவாங்கி, அழுது புலம்பி, வெந்து நொந்து வேதனைப் பட்ட ஓர் இளைஞன் அந்தக் கொடுமைக்கு ஒரு முடிவு கட்ட குமுறியெழுந்த வரலாறே இந்நூல்.

தாழ்த்தப்பட்ட மக்களின் இதயத் துயருக்கு மனப் புழுக்கத்திற்கு, உள்ளக் குமுறலுக்கு விடிவு காண அந்த மக்களிடையேயிருந்து தோன்றிய ஒரு போராட்ட வீரனின் வரலாறே இந்நூல்.

## நான் என்றும் மக்கள் ஊழியனே

### ஏ.கே.கோபாலன்




மக்கள் பதிப்பு
ரூ. 80/- பக்க 320

நாம் வாழும் இன்றைய காலத்தில் பெரும்பாலான அரசியல்வாதிகள் வியாபார அரசியலில் உள்ளனர். இவர்கள் பொதுமக்களின் நலன்களுக்கு எதிராகவே செயல்படுகின்றனர். அரசியல் தலைவர்கள் மதத்தையோ, சாதியையோ அல்லது வர்த்தகக் கூட்டத்தையோ சார்ந்தவர்களாகத் தங்களை அறிவித்துக் கொள்வதில் பெருமைப்படும் நிலை இப்போது அதிகரித்து வருகிறது. ஏ.கே.ஜி இப்படிப்பட்ட அரசியலை எப்போதுமே வெறுத்து ஒதுக்கினார். அவரைப் பொறுத்தவரை மக்களுக்காக உழைப்பதுதான் உண்மையான சேவை.

ஏ.கே.ஜி எல்லா ஜனநாயகவாதிகளுக்கும் இடதுசாரிகளுக்கும் அரிய பண்பாட்டை விட்டுச் சென்றிருக்கிறார். மக்களின் விடுதலைக்காக அவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். அதற்காக அவர் வாழ்நாள் முழுவதும் போராடினார். அவருடைய ஆழமான மனிதநேயம் மார்க்சியத்தில் இருந்து ஜனித்தது. ஒடுக்கப்பட்டவர்கள், குறிப்பாக விவசாயிகளுடன் அவர் தன்னை இணைத்துக் கொண்டார். தோழர்களின் பால் அவர் கொண்ட பாசம், பிறரைப் புண்படுத்தாத நகைச்சுவை உணர்வு,

படிப்பகம்

www.padippakam.com



அநீதியின் முகத்தில் அறையும் வீரம், அவரை மக்களின் மனம் கவர்ந்த மனிதராாக உயர்த்தியது. முற்போக்கான கொள்கை உடைய எல்லாருக்குமே அவர் மனம் கவர்ந்த மாவீரன்தான்.

## பிணந்தின்னிகள்

### சி.ஆர்.

அவசரநிலைக் காலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் கேரளத்தில் கக்கயம் சிறை முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்ட ராஜன் என்கிற பொறியியல் மாணவனின் கதி என்ன? எங்கே என் மகன் என்று அவனுடைய தந்தை பேராசிரியர் ஈச்சரவாரியார் எழுப்பிய கேள்வி தேசமெங்கும் முட்டிமோதி எதிரொலித்தது. கோடானுகோடிப் பெற்றோர்களின் நெஞ்சங்கள் பதைபதைக்க ராஜனின் வாழ்க்கை அனுமானங்களிலேயே முடிந்து போனது. ஒரு தனி மனிதனின் மரணம் - ஒரு சோற்றுப்பதமாக.




மக்கள் பதிப்பு
ரூ. 20/-
பக்கங்கள் 64

## மௌன வசந்தம்

### பூச்சிக் கொல்லிகளின் விபரீத விளைவுகள்

### தி. சுந்தரராமன்

அளவிற்கு அதிகமான பூச்சிக் கொல்லிகள் உபயோகம், இயற்கையையும் மனித வாழ்வையும் எவ்வாறெல்லாம் பாதிக்கும் என்பதை எடுத்துக் காட்ட ரேச்சல் கார்சன் என்ற அமெரிக்க சுற்றுப்புறச் சூழல் அறிஞர் தனது அமெரிக்க அனுபவங்களைக் கொண்டு ஒரு புத்தகம் எழுதினார். அதன் பெயர் "மௌன வசந்தம்" முதன்முதலாக பூச்சிக் கொல்லி களின் அபாயங்களை எடுத்துக் கூறி உலகம் முழு வதும் உள்ள மனிதர்களுக்கு இந்த விஷயங்களைப் பற்றி எச்சரிக்கைப்படுத்திய மிகச் சிறந்த புத்தகம் இது.




மக்கள் பதிப்பு
ரூ. 20/-
பக்கங்கள் 64

படிப்பகம்

www.padippakam.com



## சவுத் விஷன் புத்தக விலைப் பட்டியல்

| நூலின் பெயர் | பக் | விலை |
|---|---|---|
| ○ தீண்டாத வசந்தம் | 392 | 100-00 |
| ○ வரலாறு என்னை விடுதலை செய்யும் | 96 | 25-00 |
| ○ ஏகாதிபத்தியத்தின் உலகமயமாக்கல் | 240 | 60-00 |
| ○ மார்ட்டின் லூதர் கிங் | 96 | 20-00 |
| ○ ஃபிடல் காஸ்ட்ரோ உரைகள் | 80 | 20-00 |
| ○ வெற்றி நமதே | 134 | 35-00 |
| ○ நவ சீனப் புரட்சியின் வரலாறு | 640 | 200-00 |
| ○ ஸ்பார்ட்டகஸ் | 496 | 100-00 |
| ○ இன்றைய இந்தியக் கல்வி சவால்களும் தீர்வுகளும் | 480 | 140-00 |
| ○ நினைவுகள் அழிவதில்லை | 248 | 60-00 |
| ○ ஏழு தலைமுறைகள் | 336 | 80-00 |
| ○ கல்விச் சிந்தனைகள்: லெனின் | 144 | 40-00 |
| ○ ஊறல் குழிகளிலிருந்து உரிமைப்போராட்டத்திற்கு... | 80 | 25-00 |
| ○ மனிதர்கள் விழிப்படையும் போது | 384 | 125-00 |
| ○ ஒரு கம்யூனிஸ்டின் உருவாக்கம் மாவோ | 112 | 30-00 |
| ○ சூறாவளி | 136 | 40-00 |
| ○ மகாத்மாக்கள் | 158 | 40-00 |
| ○ தமிழ்நாட்டில் மூன்றடுக்கு பஞ்சாயத்து அரசாங்கம் சட்டம்,விதிகள், திட்டங்கள் | 904 | 300-00 |
| ○ சோவியத் கம்யூனிஸ்ட் (போல்ஷ்விக்) கட்சியின் வரலாறு | 592 | 180-00 |
| ○ இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டமும் | 248 | 100-00 |
| ○ மதமும் மார்க்சியமும் | 295 | 80-00 |
| ○ டாக்டர் நார்மன் பெத்யூன் கதை அறுவைச்சிகிச்சைக் கத்தியும், போர்வாளும் | 425 | 125-00 |
| ○ சூறைக்காற்று வீசிய நாட்கள் | | |
| ○ (இந்திய விடுதலைப் போராட்ட நினைவுகள்) | 208 | 40-00 |
| ○ டாக்டர் துவாரகநாத் சாந்தாராம் கோட்னிஸ் கதை | 64 | 20-00 |
| ○ இந்துத்துவக் காலச் சூழலின் மறுவாசிப்பில் பாரதியின் மெய்ஞ்ஞானம் | 276 | 50-00 |
| ○ இந்துத்துவம் இந்து சமயம் சமூக மாற்றங்கள் | 336 | 65-00 |
| ○ புரட்சிகளின் நூற்றாண்டு | 96 | 25-00 |



படிப்பகம்

www.padippakam.com

| | | | |
|---|---|---|---|
| ○ சினிமா ஓர் அற்புத மொழி | | 126 | 25-00 |
| ○ ஞெகிழி | | 64 | 20-00 |
| ○ நேற்று மும்பை இன்று குஜராத் நாளை? | கட்டுரைத் தொகுப்பு | 126 | 25.00 |
| ○ குஜராத் இனப் படுகொலைகள் 2002 | தீஸ்தா செதால்வட் | 168 | 30.00 |
| ○ காவியக் குயில் (தமிழ்ஒளி படைப்புகள்) | சங்கை வேலவன் | 112 | 20.00 |
| ○ வகுப்புவாத அச்சுறுத்தலும் மதச்சார்பின்மை சவால்களும் | கே.என். பணிக்கர் | 219 | 40.00 |
| ○ மதச்சார்பின்மை நடவடிக்கைக்கான கையேடு மதச்சார்பற்ற சமூகங்களை உருவாக்கி வளர்த்திடுவதற்கான கையேடு | அஜீத் முரிக்கான் | 152 | 30.00 |
| ○ புராணங்களும் பி.ஜே.பி.யின் புரட்டும் | வே. மீனாட்சிசுந்தரம் | 72 | 15.00 |
| ○ இயங்கியல் முறையில் சில பயிற்சிக் கட்டுரைகள் | டி.டி.கோசாம்பி | 138 | 30.00 |
| ○ மரபும் மார்க்சியவாதியும் | சி.சிவசேகரம் | 64 | 12.00 |
| ○ 20ஆம் நூற்றாண்டு ஓவியம் | கெ.றொ. கொண்ஸ்ரென்ரைன் | 94 | 30.00 |
| ○ On Education | | 128 | 15.00 |
| ○ Towards the Future | | 104 | 12.00 |
| ○ Taking Sides - Why health care does not reach the poor | | 128 | 80.00 |
| ○ சி. கோவிந்தராஜன் - சுதந்திரப் போராட்டத்திலிருந்து சமுதாயப் புரட்சிக்கு | என். ராமகிருஷ்ணன் | 160 | 30.00 |
| ○ கலாநிதி ந. சுப்பிரமணியனின் ஆய்வுகள், பார்வைகள், பதிவுகள் தொகுதி : 1 | கௌசல்யா சுப்பிரமணியன் | 488 | 125.00 |
| ○ கலாநிதி ந. சுப்பிரமணியனின் ஆய்வுகள், பார்வைகள், பதிவுகள் தொகுதி : 2 | கௌசல்யா சுப்பிரமணியன் | 536 | 125.00 |
| ○ காலத்தின் குரல் | கௌசல்யா சுப்பிரமணியன் | 536 | 125.00 |
| ○ டாக்டர் இல்லாத பெண்களுக்கு பெண்களுக்கான ஓர் ஆரோக்கிய வழிகாட்டி | | தொகுதி : 1 | 200.00 |
| ○ டாக்டர் இல்லாத பெண்களுக்கு பெண்களுக்கான ஓர் ஆரோக்கிய வழிகாட்டி | | தொகுதி : 2 | 200.00 |


படிப்பகம்

www.padippakam.com

## மக்கள் பதிப்பு விலையில்
## வெளியிடவிருக்கும் மறுபதிப்புகள்

| நூலின் பெயர் | பக் | விலை |
|---|---|---|
| ○ நாடு அழைத்தது | 204 | 50-00 |
| ○ இந்தியத் தத்துவஇயலில் நிலைத்திருப்பனவும் அழிந்தனவும் | | |
| ○ புரட்சிப் பாதையில் எனது பயணம் | | |
| ○ ஒரு பண்ணை அடிமையின் விடுதலைப் போராட்டம் | 96 | 25-00 |
| ○ உடைந்து நொறுங்கிய நாகரிகம் | 188 | 50-00 |
| ○ நான் என்றும் மக்கள் ஊழியனே | 320 | 80-00 |
| ○ நாம் அறியாத அம்பேத்கார் | 168 | 40-00 |
| ○ பிணந்தின்னிகள் | 64 | 20-00 |
| ○ மௌன வசந்தம் | 64 | 20-00 |

படிப்பகம்

படிப்பகம்

www.padippakam.com


படிப்பகம்

www.padippakam.com


படிப்பகம்